Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113
அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org


பார்வை-59 மார்கழி,2022 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00



# மீண்டும் வருகிறது பேச்சுவார்த்தை!



மாவீரர் நாள் பேரெழுச்சி உலகுக்கு சொல்லும் செய்தி



கடல் உரிமையை பறிக்கும் கடலட்டைப் பண்ணைகள்



நீதி இன்றி சமாதானம் இல்லை

ஆய்வு—அறிவு—நிமிர்வு

# கடல் உரிமையை பறிக்கும் கடலட்டைப் பண்ணைகள்




- செல்வின் -

கடலட்டைகள் வளரும் இடத்தில் மீன்களும் சிறப்பாக வளரும். எனவே கடலட்டை என்பது கடல் சூழலுக்கு அந்நிய பொருள் அல்ல, மிகவும் வளமான பொருள். கடலட்டைகளை பிடித்து ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நிய செலாவணியை ஈட்ட முடியும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் ஏற்கனவே சிறு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற பிரதேசங்களில் அவற்றுக்கு இடையூறாக அல்லது அவற்றுக்கு மாற்றாக இந்த கடலட்டை பண்ணைகளை உருவாக்குவது எந்தளவுக்கு விவேகமானது எந்தளவுக்கு எங்களுக்கு பொருத்தமானது என்பது தான் கேள்வி., விரைந்த இலாபம் தரும், கூடிய இலாபம் தரும் என்பதற்காக எங்களுடைய உள்ளூரில் சிறு மீன்பிடியாளர்களின் மீன்பிடி களங்களை எல்லாம் கடலட்டை பண்ணைகளாக மாற்றுவது எந்தளவுக்கு பொருத்தமானது என்கிற ஒரு கேள்வி எங்களிடம் இருக்கிறது.

யாழ்ப்பாண குடாநாட்டில் கடல் நீர் ஏரியில் களங்கட்டி வலை அல்லது சிறகுவலை என்கிற வலையை கட்டி மீன்பிடித்தல் என்கிற ஒரு முறை இருக்கும். அதற்காக தடிகளை ஊன்றி அதில் வலைகளை பொருத்தி மீன்களை பிடிப்பார்கள். ஒரு பதினைந்து நாட்கள் அல்லது ஒரு மாதம் கழித்து அந்த வலைகளை எடுத்து கொண்டு வந்து கரையில் போட்டு காய வைத்து பாசிகளை நீக்கி ஒரு மூன்று - ஐந்து நாட்கள் இடைவெளிக்குள் மீண்டும் கொண்டு சென்று அந்த இடத்தில் போட்டு மீன்பிடி செய்வார்கள். இங்கு இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான பரஸ்பர ஊடாட்டம் நடந்து கொண்டே இருக்கும்.

கடலட்டை பண்ணைகளில் என்ன நடக்கிறது என்றால் கடலுக்குள் வேலிகள் போடுகின்றார்கள். அது ஒரு கிழமை இரண்டு கிழமை ஒரு மாதத்தில் பிடுங்கப்படும் வேலிகள் அல்ல, அந்த வேலிகளுக்குள் அவர்கள் கடலட்டை குஞ்சுகளை போடுகிறார்கள். குஞ்சுகள் காணாமல் போகும் என்பதற்காக காவலுக்கு நிற்கின்றார்கள். கடலுக்குள்ளேயே மரக்கால்கள் அல்லது சீமெந்து தூண்களையோ ஊன்றி அதற்கு மேலே ஒரு தளம் அமைத்து காவல் கொட்டில் போடுகின்றார்கள். அந்த கடலட்டை குஞ்சுகள் களவு போகாமல் இருப்பதை பார்ப்பதற்காக மின்சார வேலிகளை போடுகிறார்கள். மின்விளக்குகளை பொருத்துகிறார்கள். மின்விளக்குகளை பொருத்துவதால் இப்பகுதியில் உள்ள மீன் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படுகிறது.

இந்த பிரதேசத்தில் மீனவர்கள் பாரம்பரியமாக இறால் பிடிக்கும் தொழிலை செய்தவர்கள். மிக நீண்ட ஒரு தலையணை உறை போன்ற வலையை இரு பக்கம் இருவர் பிடித்து அப்படியே இழுத்து கொண்டு போவதன் மூலம் இந்த இறால்களை பிடிப்பார்கள். இப்பொழுது அத்தகைய தொழில்கள் செய்ய முடியாதவாறு கடலுக்குள் எல்லைகள் போடப்பட்டுள்ளன. இப்போது இந்த எல்லைக்குள் படகுகள் எதுவும் செல்ல கூடாது, இது தங்கள் எல்லை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி உள்ளார்கள். இதனால் பல முரண்பாடுகள் கடலில் தோன்றி

உள்ளன. இதுவரை கடல் தொழிலில் ஈடுபட்ட பல சிறு கடல் தொழிலாளர்களை பேராசை காட்டி அவர்களுக்கு கொஞ்சம் காசு கொடுத்து அவர்கள் தொழில் செய்கின்ற பிரதேசங்களை எல்லாம் வாங்கியது போன்று கையகப்படுத்தி அங்கு பண்ணைகளை போடுகிறார்கள். எங்களிடம் இரண்டு மூன்று கேள்விகள் இருக்கின்றன. ஒன்று எங்களுக்கு தேவையான கடல் உணவை புரத உணவை நாங்கள் எங்கிருந்து பெறுவது? ஏற்கனவே நாங்கள் பிடிக்கின்ற இறால்கள், மீன்கள், நண்டுகள், போன்றவற்றில் தரமானது எல்லாவற்றையும் கொழும்பு சந்தைக்கு அனுப்பி விட்டு நாங்கள் கழிவுகளை தான் சாப்பிடுகின்றோம். எங்களுக்கு ஒரு தரமான இறால், தரமான மீன், தரமான நண்டு, தரமான கணவாய் போன்றவை கிடைப்பதில்லை. இப்படியான நிலையில் இந்த சிறு தொழில் செய்கின்ற இடங்களையும் கடலட்டை தொழில் செய்யும் இடங்களாக மாற்றினால் எங்களுக்கு கடல் புரத உணவை வழங்குவது யார்? கடலட்டையை ஏற்றுமதி செய்து அந்நிய செலவாணியை உழைத்து அதை திருப்பி கொடுத்து தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களை இறக்குமதி செய்து வாங்கி சாப்பிட போகிறோமா?

ஒரு காலத்தில் இலங்கையின் 40 வீத கடல் உணவுத் தேவையை பூர்த்தி செய்த சமூகம் இன்றைக்கு தனக்கு தேவையான கடல் உணவு புரதத்தை கூட பெற முடியாமல் போராடி கொண்டு இருக்கும் நிலைமையில் இருக்கின்ற குறைந்தபட்ச கடல் தொழிலையும் வளம் குன்ற செய்கின்ற ஒரு ஆபத்தான விடயத்திற்கு நாங்கள் செல்ல முடியுமா என்ற கேள்வி இருக்கிறது. ஏனெனில் கடலட்டையை நாங்கள் சாப்பிட முடியாது. நஞ்சு அல்ல அது எங்களுடைய பண்பாட்டில் இல்லாத ஒரு பொருள். இரண்டாவது, இந்த கடல் உணவு தயாரித்தல் என்பது எமது உணவுப் பண்பாடு. இந்த உணவுப் பண்பாடு இல்லாமல் அழிந்து போகப் போகிறது. தகரத்தில் அடைக்கப்பட்ட ஏதோ ஒரு விதமான மீன்களை மட்டும் வாங்கி சமைத்து சாப்பிடும் ஆட்களாக நாங்கள் மாற போகிறோமா? எனவே இங்கே ஒரு அடிப்படையான உணவு பாதுகாப்பு என்கிற உணவு

> **“கடலட்டை வளர்ப்பு தன்னுடைய உன்னதத்தை இழக்கும் பொழுது நாங்கள் மீண்டும் வந்து கடலில் மீன் பிடிக்கும் திறமையை தொழிலாண்மையை கொண்டவர்களாக இருக்க மாட்டோம்”**

இறைமை என்கிற ஒரு விடயம் முற்றிலுமாக நாசமாக்கப்படுகின்றது. இது நீண்ட காலத்தில் எங்களுடைய சமூகம் மிகப்பெரிய ஒரு உணவு நெருக்கடிக்கும் உணவு இறைமை என்ற கேள்விக்குமே போகின்றது. இது ஒன்று, இரண்டாவது கடலட்டை வளர்ப்பதற்காக களங்களை தாங்கள் கையகப்படுத்திய போது கடல்தொழில் செய்கின்றவர்களின் எண்ணிக்கை குறையும். கடலட்டை வளர்ப்பு என்பது ஒரு சிறு தொழில் முயற்சி அதற்கு தேவையான அறிவு மட்டுப்படுத்தப்பட்டது ஒரு விடயம் சார்ந்தது.

ஆனால் கடலில் மீன் பிடிப்பது அறிவு நுணுக்கம் கொண்டது. அந்த இடத்தை நாங்கள் விட்டு வெளியேறி கடலட்டை வளர்ப்பதற்காக எங்களை அர்ப்பணிப்போமாக இருந்தால் அது ஐந்து வருடங்களாக இருக்கலாம் பத்து வருடங்களாக இருக்கலாம் அதற்கு பின்பு கடலட்டை வளர்ப்பு தன்னுடைய உன்னதத்தை இழக்கும் பொழுது நாங்கள் மீண்டும் வந்து கடலில் மீன் பிடிக்கும் திறமையை தொழிலாண்மையை கொண்டவர்களாக இருக்கமாட்டோம். அப்பொழுது எங்களிடம் ஒட்டு மொத்தமாக கடலில் இறங்கி கடல் வேளாண்மை செய்வதற்காக எந்த வாய்ப்புகளும் எம்மிடத்தில் இல்லாமல் போகும். எங்களுடைய உற்பத்தி சாதனங்கள் எல்லாமே கைவிடப்பட்டிருக்கும். நாங்கள் கடல்களில் இருக்க வேண்டிய தேவை இல்லாதவர்களாக இருப்போம். கடலுக்குள் செல்ல தேவை இல்லாதவர்களாக இருப்போம். கரையைவிட்டு உள்நோக்கி நகர்வோம். பண்பாட்டு இருப்பு, சமூக இருப்பு, பொருளாதார

(19 ஆம் பக்கம் பார்க்கவும்)

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

# ஆசிரியர் பார்வை

## தமிழ் மக்களின் ஆணைக்கு எதிராக செயற்படுகின்ற தமிழ் தலைமைகள்?

ஒரு பக்கம் வடக்கில் காணி அபகரிப்பு தொடர்ந்து வருகிறது. மறுபக்கம் ஜனாதிபதி அழைத்தவுடன் பேச்சுக்கு பாய்ந்தடித்து செல்கிறது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு. முல்லைத்தீவு வட்டு வாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமிற்காக காணிகளை சுவீகரிக்கும் நில அளவீட்டு நடவடிக்கை கடந்த 13ஆம் திகதியன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிந்த காணி உரிமையாளர்கள் பலர் கடற்படை முகாமிற்கு முன்னால் ஒன்றுகூடி எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் நிலங்களை கடந்த 13 வருடங்களாக ஆக்கிரமித்து பாரிய கடற்படை முகாம் ஒன்றினை கடற்படையினர் அமைத்துள்ளார்கள். அந்த காணிகளை படை முகாமின் தேவைக்காக கடந்த சில வருடங்களாக நிரந்தரமாக சுவீகரித்துள்ளார்கள்.

தமிழ் அரசியல் தலைமைகளை பேச்சுவார்த் தைக்கு சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்த பொழுது குறைந்தபட்சம் இந்த காணி அபகரிப்புகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற முன்னிபந்தனையாவது கூட்டமைப்பினரால் வைத்திருந்திருக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு சர்வ கட்சி மாநாட்டை நடத்தி இனப்பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுப்பது போன்றும் அதனூடாக பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்கு ஒரு வழியை திறக்க முடியும் என்றும் காட்ட வேண்டிய தேவை சனாதிபதிக்கு உள்ளது. அதனூடாக கடன் வழங்கிய நாடுகளுடன் கடன் மறுசீரமைப்புக்கான பேச்சுவார்த்தையை முன்கொண்டு செல்ல முடியும் என்று அவர் நம்புகிறார். மொத்தத்தில் சிறிலங்கா அரசாங்கம் பல முனைகளிலும் பலம் இழந்த நிலையில் இன்று இருக்கிறது. ஆயுதப் போராட்ட காலத்தில் சிறிலங்கா அரசாங்கம் பலமிழந்து காணப்பட்ட போதெல்லாம் போராளிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்து காலம் கடத்தி அதன் போது இராணுவ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தன்னைப் பலப்படுத்தியதையே செய்து கொண்டது. அதேபோன்ற ஒரு நடவடிக்கையையே இந்த பொருளாதார நெருக்கடிக் காலத்திலும் அரசு செய்ய நினைக்கிறது. சிறிலங்கா அரசுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த கையறு நிலையை குறைந்தபட்சம் காணி அபகரிப்பை நிறுத்துவதற்காகவாவது பேரம்பேச கூட்டமைப்பு பயன்படுத்தி இருக்க வேண்டும். தமிழர் தாயகப் பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம், அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான போராட்டம், காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டம் என்பன தொடர்ந்து வருகின்றன. எங்களின் அரசியல் தலைமைகள் இப் போராட்டங்களில் பெரும்பாலும் கலந்து கொள்வதில்லை. மக்களுடன் களத்தில் நிற்பதுவுமில்லை. கடந்த மாவீரர் தினத்தன்றும் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வையே தமிழ் மக்கள் மீண்டும் மறைமுகமாக வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்த நிலையில் சிறிலங்கா அரசினால் நியமிக்கப்படும் ஆளுனரின் கையில் அதிகாரங்கள் குவிந்துள்ள 13ஆம் திருத்தத்தை ஆரம்ப புள்ளியாக வைத்து நிபந்தனையின்றி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட கூட்டமைப்பு முனைவது ஏன்?

மீண்டும் “ஏக்கிய ராஜ்ஜிய” வை தூசி தட்டி எடுத்து ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் தீர்வை முடக்கும் முயற்சியில் தான் சிங்கள அரசு நகர்ந்து வருகிறது. அதற்கு கூட்டமைப்பு உடன் போவது போல தென்படுகிறது. ஆனால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிறிலங்கா அரசுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் அதற்கான காலம் கடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை சொல்லி நிற்கின்றன.

இப்பொழுது சிங்கள அரசுக்குத்தான் தமிழ் மக்கள் தேவைப்படுகிறார்கள். சர்வதேச நாணய நிதியம் இனப்பிரச்சினை தீர்வையும் ஒரு முக்கிய நிபந்தனையாக விதித்துள்ள நிலையில் தமிழ் மக்களின் பேரபலம் அதிகரித்துள்ளது. சிறிலங்கா அரசு கீழிறங்கி வரும் நிலையில் உள்ளது. சுய நிர்ணய உரிமையுடன் கூடிய சமஸ்டி என்ற அடிப் படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் மட்டுமே பேச்சில் கலந்து கொள்ள முடியும். இதற்கு சிங்கள மக்களையும் சிங்கள அரசியல் தலைமை தான் தயார்படுத்த வேண்டும். தமிழ்த் தலைமைகளும் தமிழ்மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக செயற்படக்கூடாது.

அட்டைப்படம்: இ.கிருபாகரன்

-செ. கிரிசாந்-

# இந்துத்துவத்துக்குள்ளால் ஈழத்தமிழர்களை இந்தியா அணுகக் கூடாது



- ஹயன் -

திருகோணமலை மாவட்டமானது இலங்கை காலனித்துவ தேசமாக காணப்பட்ட காலம் முதலும், அதன் பின்னரான சுதந்திர இலங்கையிலும், உள்நாட்டு யுத்தத்தின் போதும் தொடர்ச்சியாக முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. ஆசிய கண்டத்தின் பாரத நிலப்பரப்பிற்கு அண்மையிலும், இந்து சமுத்திரத்தின் தொடு தேசமாகவும் காணப்படும் இலங்கையில், திருக்கோணமலை இயற்கையாக அமைந்த ஒரு துறைமுகமாக உலக அரசியல் சக்திகளால் நன்கு உணரப்பட்டுள்ளது. இதனால் இதற்கான வல்லரசுகளின் போட்டி தொடர்ச்சியாக அன்று முதல் இன்று வரை நிலவி வருகின்றது. எனினும் ஈழத்தமிழரின் பிரச்சினைகளில் இந்தியாவை சரியான முறையில் கையாளக் கூடிய தமிழ்த் தலைவர்கள் கிடைக்கவில்லை என்பது வரலாறு சொல்லும் பாடம்.

இந்தியா-சீனா இடையிலான அதிகாரப் போட்டியின் விளைவாக இன்றைய கட்டத்தில் இந்தியாவின் நேரடி தலையீடுகள் திருகோணமலையில் மெல்ல மெல்ல அதிகரித்து வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. சர்வதேச நீரிழிவு தினத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யாழ்-இந்திய துணை தூதரகம், கப்பல்துறை ஆயுர்வேத வைத்தியசாலை, கிழக்குமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் என்பன இணைந்து திருகோணமலையில் கண்காட்சி ஒன்றினை ஒழுங்குபடுத்தி இருந்தனர். இது கார்த்திகை 14, 15ம் திகதிகளில் நடந்தது. அதே சமயம் அன்றைய தினத்திலேயே, இந்திய துணை தூதரகம் திருகோணமலையை சேர்ந்த “இராவணசேனை” எனும் அமைப்புடன் இணைந்து கூட்டங்களையும் நடத்தியுள்ளது. இக்கூட்டங்களில் மக்களுக்கு நிவாரணப் பொதிகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதுவர் கலந்து கொண்டிருந்தார். ஒரு துணைத் தூதுவர் இலங்கையில் காணப்படும் ஒரு மதம் சார்ந்த அமைப்பு நடத்திய மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டது பல கேள்விகளை எழுப்பி உள்ளது.

குறித்த அமைப்பானது திருகோணமலையில் தொடர்ச்சியாக இந்துத்துவா நிலைப்பாட்டுடன் இயங்கி வருவதுடன், இஸ்லாமிய வெறுப்பு சிந்தனைகளை வெளிப்படுத்தும் வண்ணம் இயங்கிவருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இந்நிலையில் அந்த அமைப்பின் உதவியுடன் நடத்தப்பட்ட விடயங்களில் இந்திய துணைத்தூதர் கலந்து கொண்டுள்ளார். இந்தியாவின் இலங்கைக்கான தூதுவர் கோபால் பாக்லே கடந்த ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மாத்திரம் திருகோணமலைக்கு இரண்டு தடவைகள் வந்து சென்றுள்ளார். திருக்கோணேஸ்வர ஆலய நிலைமைகளையும், அங்குள்ள பிரச்சனைகளையும் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

இதற்கு முன்னர் திருகோணமலையின் சம்பூர் பகுதியை மையப்படுத்தி அனல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்கும் செயற்பாடுகள் இந்தியாவினால் முன்னெடுக்கப்பட்டது. அந்த முயற்சிகளுக்கு எதிராக

திருக்கோணமலை நலன்புரி அமைப்புகள் குரல் கொடுத்தன. அதன் பயனாக குறித்த செயல் திட்டம் தள்ளிப் போடப்பட்டது என்பது யாவரும் அறிந்த விடயம். எனினும் தற்பொழுது திருகோணமலை சீனன்குடா பகுதியில் காணப்படும் எண்ணெய் தாங்கிகளை இந்தியா தன்வசப்படுத்தவும், சம்பூர் நிலப்பகுதியில் சூரியமின்கல நிலையங்களை அமைக்கவும் தனது முயற்சிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினையின் தீர்வில் இந்தியாவின் தலையீடு ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒவ்வொரு விதமாக இருந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இந்திராகாந்தியின் காலப்பகுதியில் கிழக்கு பாகிஸ்தானை தனிநாடாக பிரகடனம் செய்ய ஒத்துழைத்த இந்தியா தனது தெற்கு பகுதியில் காணப்படும் இலங்கையில் தமிழர்களுக்கான தாயகபூமி அமைவதில் அவ்வளவு விருப்பத்தை காட்டவில்லை என்பது தெரிந்த விடயம். இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி எனும் காங்கிரஸ் மைய அரசியலில் தமிழர்களின் நிலைப்பாடு அவ்வளவு உகந்ததாக இருக்கவில்லை.

எனினும் தற்பொழுது பாரத தேசத்தில் தழைத்தோங்கியுள்ள இந்துத்துவ அரசியலைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர்களை இந்தியாவுடன் இணைந்து போகச் செய்யும் அழுத்தங்கள் பெருமளவில் உள்ளது என்பது அண்மைகால நிகழ்வுகளில் தெளிவாக உள்ளது. எனினும் இந்திய மத்திய அரசின் இந்த அவாவை மறுதலித்து அல்லது பயன்படுத்தி சரியான பேரம் பேசுதலை இந்தியாவுடன் மேற்கொள்ளக்கூடிய தலைமையை தமிழர் தரப்பு கண்டறிய வேண்டும்.

கடந்த காலங்களில் இந்தியாவின் வேறுபட்ட நிலைப்பாடுகளால் ஈழத்தமிழர்களுக்கு பல அநியாயங்கள் நிகழ்ந்துள்ளன. இந்தியா தொடர்பில் ஈழத்தமிழர்களுக்கு பல்வேறு சந்தேகங்களும் உள்ளன. குறிப்பாக தற்பொழுது சீனா இந்தியா இடையிலான அதிகாரப் போட்டியில் சீனா இலங்கையில் ஆழ காலூன்றும் நிலைக்கு வந்துள்ளது. அதற்குப் போட்டியாக சிறிலங்கா அரசை ஒருவகையிலும் ஈழத் தமிழரை இன்னொரு வழியிலும் இந்தியா கையாள முனைந்து வருகிறது.

அந்த வியூகத்தின் ஒரு பகுதியாக ஈழத்தமிழர் மத்தியில் இந்துத்துவத்தை பரப்பி அவர்கள் மீது செல்வாக்கை நிறுவ இந்தியா முயற்சிக்கிறது. அந்த செல்வாக்கை சிறிலங்கா அரசுடனான தனது பேரம் பேசலுக்கு பலம் சேர்க்க பயன்படுத்த நினைக்கிறது. இந்த நோக்கத்தையும் நடவடிக்கைகளையும் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கைத் தீவில் தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம் என்பதனை ஏற்றுக் கொண்டு, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய கௌரவமான தீர்வை நோக்கி நகர இந்தியா உதவ வேண்டும். அதனூடாக மட்டுமே இந்தியா தனது செல்வாக்கை ஈழத்தமிழர் மத்தியில் நிறுவ முடியும்.

பிராந்திய வல்லரசான இந்தியாவை தாண்டி ஈழத்தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவது கடினம். இந்தியா மீது கவனம் செலுத்தாமல் இலங்கையில் அரசியல் நடத்த முடியாது என்பதே யதார்த்தம். இதனை சிங்கள அரசு சரியாக ஆரம்பம் முதலே புரிந்து கொண்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே இந்தியாவுக்கு எதிரான தனது வெளிநாட்டுக் கொள்கைகளை காலம் காலமாக உருவாக்கி கடைப்பிடித்து வந்துள்ளது.

அதாவது, இந்தியாவுடன் ஒரு இராணுவ யுத்தத்தில் ஈடுபடாமலும் தனது இந்திய எதிர்ப்புக் கொள்கைகளை விட்டுக்கொடாமலும் சிறிலங்கா இந்தியாவை தனக்கு சாதகமான வகையில் கையாண்டு வந்திருக்கிறது. இதனை சரியாக புரிந்து கொண்டு தமிழ் அரசியல் தலைமைகள் தமக்குள் இருக்கும் கட்சி பேதங்களை பின் தள்ளி இது தொடர்பான உரையாடலை நடத்த வேண்டும். இந்தியாவை கையாள்வது எப்படி என்ற ஒரு செயற்திட்டத்தை உருவாக்க வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளை வெல்வதன் பக்கம் உறுதியாக நின்று கொண்டு இந்தியாவுடன் ஒரு சமதளத்தில் நின்று நமது பேரம் பேசலை வலுவாக்கும் நோக்கத்தை

(22 ஆம் பக்கம் பார்க்கவும்)

# மீண்டும் வருகிறது பேச்சுவார்த்தை




- லிங்கம் -

ஆங்கிலேயர் ஆட்சி முடிவுக்கு வந்த நாளிலிருந்து இனங்களுக்கிடையேயான பிரச் சனை இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியற் பரப்பில் ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்து வந்திருக்கிறது. இனப்பிரச்சினை காரண மாகத்தான் இலங்கை பொருளாதார ரீதியாக முன்னேற முடியாமலும் சமூக அபிவிருத்தியில் பின்தங்கியும் அரசியல் ரீதியாக வங்குரோத்து நிலைமையிலும் இருக்கிறது என்று பல உள் நாட்டு மற்றும் சர்வதேச நிபுணர்கள் சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்கள். ஆண்டாண்டு காலமாக சிறுபான்மை இனங்கள் மீது நடத்தப்படும் இனக்கலவரங்களும் அவற்றால் ஏற்படும் சமூக, பொருளாதார பாதிப்புக்களும் இதற்கு சான்று களாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்த பெரும்பான்மை பேரினவாத அடக்கு முறைகளுக்கு முகம் கொடுப்பதற்காக தமிழ் பேசும் மக்கள் தம்மை ஒரு இனமாக ஒன்று திரட்டிக் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர் வாக பல தீர்வுகளை முன்வைத்து இருக்கி றார்கள். ஆனால் அவர்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் ஒன்றுபடுவதைத் தடுப் பதற்காக பல பிரித்தாளும் சதிகளை சிங்கள பேரினவாதம் அரங்கேற்றி அவர்களை ஈழத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத்தமிழர் என்று பிரித்துப் போட்டுள்ளது.

இதன் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக இன்று ஈழத்தமிழரை வடக்குத் தமிழர் கிழக்குத் தமிழர் என்று பிரிக்கும் நடவடிக்கையை பேரினவாத அரசு துரிதமாக முன்னெடுத்து வருகிறது. ஒரு அரசற்ற இனமாக இருக்கும் தமிழ் பேசும் மக்கள் தாம் ஒரு தோற்றுப் போன இனம் என்று எண்ணிக் கொண்டு இந்த சதிகளிற்கு பலியாகி வருகின்றனர்.

அதேவேளை, இலங்கைத்தீவில் தமிழ் பேசும் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் அபிலாசைகளை அடக்கியாள்வதற்காக சிங் கள பேரினவாதம் தனது இயலுமைக்கும் மேலாக வெளிநாடுகளிடம் கடனை வாங்கி ஒரு யுத்தத்தை நடத்தி முடித்திருக்கிறது. பல போர்க்குற்றங்களை கட்டவிழ்த்து விட்டு பெருமளவு அப்பாவி தமிழ் மக்களை படு கொலை செய்து ஒரு யுத்த வெற்றியை ஈட்டி இருக்கிறது. அந்த யுத்த வெற்றியின் ஊடாக சிங்கள இனத்தின் மீட்பர்களாக மகிந்த ராஜபக்ச குடும்பம் தம்மை நிலைநாட்டிக் கொண்டது. யுத்த வெற்றி தந்த அங்கீகாரம் ராஜபக்ச குடும்பத்தினர் கண்மூடித்தனமாக வெளிநாடுகளிடமிருந்து மேலும் கடன் வாங்கவும், முக்கியமாக சீனாவின் தங்கு தடையற்ற முதலீட்டை இலங்கையில் ஊக்குவிக்கவும் வழிவகுத்தது. அதன் தொடர்ச்சியாக சிறி லங்கா ஒரு கடன் சுழலுக்குள் சிக்குண்டு ஒரு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கின்றது. இன்று வெளிநாடுகளிடமிருந்து வாங்கிய கடன்களுக்கான வட்டியையோ முதலையோ திருப்பிக் கட்ட முடியாமல் இருப் பதாக வங்குரோத்து நிலையை பிரகடனம் செய்து இருக்கிறது.

பொருளாதார நெருக்கடி காரணமாக பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த கோதாபய ராஜபக்ச பதவியிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டதும், அவரது இடத்துக்கு ஐக்கிய

தேசிய கட்சியைச் சேர்ந்த ரணில் விக்கிரம சிங்கவை பொதுஜன பெரமுன கட்சியினரே நியமித்துள்ளதும் நடந்தேறி இருக்கிறது. மொத்தத்தில் நாடு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மோசமான வங்கு ரோத்து நிலைக்கு வந்துள்ளது. இந்த வங்கு ரோத்து நிலையில் இருந்து மீண்டு வரவும், வெளிநாடுகளிலிருந்து மேலும் கடன் பெறவும் உதவி செய்யுமாறு சர்வதேச நாணய நிதி யத்திடம் சிறிலங்கா அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. அதன் தொடர்ச்சியாக கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் கடன் வழங்கிய நாடுகளும், சிறிலங்கா அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் ஈடுபட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளில் முக்கியமான பேசு பொருளாக இருப்பது, இலங்கையில் ஒரு பொருளாதார அபிவிருத்திக்கான சாத்தியப் பாட்டுக்கு இனப்பிரச்சனை தீர்க்கப்படுதல் அடிப்படையானது என்பதாகும்.

இந்தப் பின்னணியிலேயே இனப்பிரச் சினைத் தீர்வுக்காகப் பேச வாருங்கள் என்று தமிழ் கட்சிகளை நோக்கி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்து இருக்கின்றார். இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவெனில், இந்த அழைப்பை விடுத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க மக்க ளால் பாராளுமன்ற உறுப்பினராகக் கூடத் தெரிவு செய்யப்படாத ஒரு நபர். ராஜபக்ச குடும்பத்தினரைக் காப்பாற்றுவதற்கு வேறு எந்த சிங்கள அரசியற் தலைவர்களும் முன்வராத நிலையில் பொதுஜன பெரமுனவினால் அக் கடமையை நிறைவேற்றவெனத் தெரிவு செய்யப்பட்டவரே இவர். இவருக்கு சிங்கள மக்கள் மத்தியில் கூட பெரும்பான்மை ஆதரவு இல்லை. இவர் ஜனாதிபதியாக இருப்பதற்கு சிங்கள இனவாதக் கட்சியான பொதுஜன பெரமுனவின் ஆதரவிலேயே தங்கி இருக்கிறார். அப்படி இருக்கும் ஒரு நபரால் தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து ஒரு தீர்வைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியுமா என்பது சந்தேகத்துக்கு இடமானது.

சிங்கள மக்களிடமிருந்து எந்தவிதமான தேர்தல் ஆணையையும் பெற்றுக் கொள்ளாத ஒருவருடன் தமிழ்க்கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது வீண் விரயமே. 2015ஆம் ஆண்டு சிங்கள மக்களினால் தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு தொடர்பாக எடுத்த முன்னெடுப்புக்களுக்கு இறுதியாக என்ன நடந்தது என்ற ஓர் உதாரணமே மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவர் எடுக்கும் தீர்வு நடவடிக்கைகளுக்கு என்ன நடக்கும் என்பதை அறியப் போதுமானது.

> ***"இனப்பிரச்சனைக்கு தீர்வான பேச்சுவார்த்தையை முன்னெடுக்க எந்தவிதமான அடிப்படைத் தகுதியும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடையாது"***

பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்றவுடன் முந்தி அடித்துக் கொண்டு ஓட நினைக்கும் தமிழ்த் தலைமைகள் இதனை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக இனப் பிரச்சனைக்கு தீர்வான பேச்சுவார்த்தையை முன்னெடுக்க எந்தவிதமான அடிப்படைத் தகுதியும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடை யாது என்பதையும் அவர் எடுக்கும் எந்த நடவடிக்கையும் தோல்வியிலேயே முடியும் என் பதையும் உறுதியாக கூற முடியும்.

இரண்டாவதாக, கடுமையான பொரு ளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள சிறிலங்கா, உலக நாடுகளின் அறிவுறுத்தல் களுக்கு அமைவாக அதிலிருந்து மீளும் தந்திரோபாயத்தில் தமிழர்களுடன் பேசுவது என்ற முடிவை எடுத்திருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினை இத்தீர்வில் நிரந்தரமாக தீர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கிஞ்சித்தும் இல் லாத சிங்கள அரசியல் தலைமை ஏதாவது

பொருத்தமில்லாத அரைகுறைத் தீர்வை தமிழ் மக்களின் தலையில் கட்டிவிடப் பார்க்கின்றது. அண்மையில் தமிழர்களுக்கு தீர்வாக மாவட்ட அபிவிருத்தி சபைகளே போதும் என்று முன்னாள் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றில் முன்மொழிய ரணில் விக்கிரமசிங்க வழிமொழிந்துள்ளார். இவ்வாறாக ஒரு அரைகுறைத் தீர்வை அரசியல் அமைப்பாக எழுதிக் கொண்டு இனப்பிரச்சனை தீர்க்கப்பட்டு விட்டதாக கடன் வழங்கும் நாடுகளுக்கு பிரகடனப்படுத்திக் கொண்டு மீண்டும் கடன் சந்தையில் மேலும் கடன்களை துரிதகதியில் பெறுவதற்கான முனைப்பாகவே இதனை பார்க்க வேண்டி உள்ளது.

மூன்றாவதாக, சிறிலங்கா அரசுக்கும் தமிழ் அரசியற் தலைவர்களுக்கும் இடையே நிகழ்த்தப்பட்ட ஒப்பந்தங்கள் இலங்கையில் வரலாறு முழுவதும் நிறைந்து கிடக்கின்றன. சிங்களத்தின் ஒரு தரப்பு தமிழர்களுடன் ஒப்பந்தம் செய்வதும் அதனை மறுதரப்பு எதிர்த்து இறுதியில் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப் படுவதும் வழமையாக ஒன்றாக இருந்து வந்துள்ளது. அதனையடுத்து நடந்த ஆயுதப் போராட்ட காலங்களிலும் கூட வெளிநாடுளின் நெருக்குதல்களுடன் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் கூட அந்த நாடுகளை ஏமாற்றவும் தமிழ் மக்களின் இனப்பிரச்சனையை இராணுவ ரீதியில் அடக்குவதற்குமே பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த இழிவான நோக்கத்தை சிறிலங்கா இந்த பொருளாதார நெருக்கடிக் காலத்திலும் கூட கைவிட்டதாக எந்தவோர் அறிகுறியையும் காட்டவில்லை. பொதுஜன பெரமுன பாராளுமன்ற அங்கத்தவர்கள் சபையில் ஆற்றும் உரைகளே இதற்கு பெரும் சாட்சிகளாக உள்ளன. ஆகவே இந்த முறை நிலைமை மாறிவிட்டது என்று சொல்லிக் கொண்டு சிங்கள அரசை நம்பி பேச்சுவார்த்தை மேசையில் போய்க் குந்துவது மீண்டும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகவே முடியும்.

நான்காவதாக, தமிழர்கள் பல ஆண்டுகளாக நடத்தி வரும் இந்த அரசியற் போராட்டத்தில் அவர்கள் கோரிக்கை என்ன என்பதை தெளிவாகவே பல தடவைகள் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். 1976ஆம் ஆண்டு தனிநாடே தீர்வு என்று வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். ஆனால், இன்று யதார்த்த நிலைமை காரணமாக ஒரு சமஷ்டித் தீர்வுக்கு நாம் தயார் என எல்லா தமிழ்த் தேசிய கட்சிகளும் கூறியுள்ளார்கள். அதற்கு குறைந்த எந்த தீர்வையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர்கள் உறுதி படக் கூறியுள்ளார்கள். ஆகவே இங்கே பேசுவதற்கு எதுவுமில்லை. சமஷ்டியை அடிப்படையாக வைத்து ஒரு தீர்வுத்திட்டத்தை உருவாக்குவோம் வாருங்கள் என்று சிங்கள அரசாங்கம் அழைக்கும் பட்சத்தில் அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது மட்டுமே பேசுவதற்கு உள்ளது.

ஐந்தாவதாக, இந்த பேச்சுவார்த்தை அழைப்பு தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கார்த்திகை 15 ஆம் திகதி கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் சொல்லியவை மிகவும் முக்கியமானவை. பேச்சுவார்த்தைக்கு முன்னர் அந்தப் பேச்சுவார்த்தையின் அடிப்படைகளாக இருக்கப் போகின்றவை என்ன என்பதை சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தெளிவாகப் புரிய வைக்க வேண்டிய கடப்பாடு பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் அரசாங்கத்துக்கு உள்ளது என்று அவர் கூறியுள்ளார். அரசாங்கம் நாட்டின் பொருளாதாரப் பிரச்சனையை தீர்ப்பதற்கு இனப்பிரச்சனையைத் தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. இந்த சந்தர்ப்பத்திலாவது இதயசுத்தியுடன் செயற்பட்டு இரண்டு தரப்பினருக்கும் உண்மையை சொல்லி தீர்வு முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று அவர் சொல்லியிருந்தார். அந்த உண்மையான தீர்வு என்பது சமஷ்டியின் அடிப்படையை விட வேறு ஒன்றையும் கொண்டிருக்க முடியாது என்றும் அதனை சிங்கள மக்களுக்கு அரசு தெளிவுபடுத்திய பின்னரே நாம் அரசுடன் பேச்சுவார்த்தைக்கு போக முடியும் என்றும் தெரிவித்து இருந்தார். இந்த அடிப்படையை சிங்கள அரசு நிறைவேற்றாதவரை இந்த அழைப்பையும் கடந்த காலங்களைப் போலவே

(23 ஆம் பக்கம் பார்க்கவும்)

# நீதி இன்றி சமாதானம் இல்லை

அலிசன் ஸ்மித், பிரான்செஸ்கா பாஸோ (Alison Smith and Francesca Basso)



## ரோஹிங்கியா மக்களுக்கான நீதி

(https://www.coalitionfortheicc.org/news/20200213/justice-rohingya-what-has-happened-and-what-comes-next)

பல தசாப்தங்களாக பர்மா இராணுவமும் அரசும் கட்டமைக்கப்பட்ட ரீதியில் திட்டமிட்டு மியன்மாரிலுள்ள ரோஹிங்கியா மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறி வருகிறார்கள். இதற்கு சமாதானத்திற்கான நொபல் பரிசு பெற்ற ஆங்சான் சூகி (Aung San Suu Kyi) இன் அரசும் கூட விதி விலக்கல்ல. இந்த மனித உரிமை மீறல்களில் மிகவும் குறிப்பிடத்தக்கது அந்த மக்களுக்கான குடியுரிமையை மறுத்தமையாகும். ரோஹிங்கியா மக்கள் அந்த நாட்டிற்கு சொந்தமான இனக்குழுமத்தினர் என்று அங்கீகரிக்கப்படு வதில்லை.

அவர்களின் தேவைகளை பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான அடிப்படை ஆவணங்கள் கூட அவர்களுக்கு வழங்கப்படு வதில்லை. இதனால் அவர்கள் நாடற்ற வர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். அதாவது வாக்களிக்கவோ, கல்வி கற்பதற்கோ, பயணம் செய்வதற்கோ, திருமணம் செய்வதற்கோ, தமது சமயத்தை கடைப்பிடிக்கவோ, சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்ளவோ அருகதை அற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

மியன்மாரில் 2017ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது பெருமளவான இராணுவ அட்டூழிங்களும் மனித உரிமை மீறல்களும் ரோஹிங்கியா மக்கள் மீது நடத்தப்பட்டன. 720 ஆயிரம் ரோஹிங்கியா மக்கள் பங்களாதேசத்துக்கு தப்பி ஓடினர். மேலும் ஒரு லட்சத்திற்கு மேலான மக்கள் உள்ளக இடப்பெயர்வாகி முகாம்களில் வைக் கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. ரோஹிங்கியா மக்கள் படுகொலைகள், பாலியல் அடிப் படையிலான வன்முறை மற்றும் பிற அட்டூழியங்களுக்கு உட்பட்டுள்ளனர். உலகில் மிகவும் துன்புறுத்தப்பட்ட சிறுபான்மையினர் என்று ஐ.நா. செயலாளர் குறிப்பிடும் அளவுக்கு ரோஹிங்கியா மக்கள் இனப்பாகுபாட்டிற்கும் அடக்கு முறைக்கும் உள்ளாகி உள்ளனர்.

## ரோஹிங்கியா மக்களின் நீதிக்கான சட்ட முன்னெடுப்புகள்

2019 கார்த்திகையில், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (Organization of Islamic Cooperation, OIC) என்ற அமைப்பில் இருக்கின்ற நாடுகள் சார்பாக ரோஹிங்கியா வழக்கை காம்பியா (Gambia) என்கின்ற நாடு ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றத்தின் (ICJ) முன் கொண்டு வந்தது. இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து, இனப்படுகொலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இடைக்கால நடவடிக் கைகளை அந்த வழக்கு கோருகிறது. மேலும் இனப்படுகொலையைச் செய்தவர்களைத் தண்டித்தல் மற்றும் உரிய ஆதாரங்களைப் பாதுகாத்தல் என்பவற்றை உத்தரவிடுமாறு அது கேட்கிறது. இன்னொரு புறம், 2019 ஆடி மாதத்தில், சர்வதேச குற்றவியல் நீதிமன்ற

த்தில் (International Criminal Court. ICC) வழக்குத்தொடுனர் படாஉ பென்சோடா (Fatou Bensouda) வங்காளதேசம் மியன்மார் பகுதிகளில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரணையைத் தொடங்க அங்கீகாரம் கோரினார். அதேவேளை, உலகளாவிய சட்ட அதிகாரம் (universal jurisdiction) என்ற கோட்பாட்டின் கீழ் ரோஹிங்கியாக்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலை உள்ளிட்ட கடுமையான குற்றங்களை காட்டி ஆர்ஜன்டீனா நீதிமன்றத்தில் இங்கிலாந்தில் இருக்கும் பர்மிய ரோஹிங்கியா அமைப்பின் தலைவர் Tun Khin ஒரு வழக்கை தாக்கல் செய்தார்.

இந்த மூன்று வழக்குகளும் 2019 கார்த்திகையில் பலமான சூறாவளியாக ஒரு புள்ளியில் இணைந்தன. இது ரோஹிங்கியாக் களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை எழுப்பியது. இந்தக்கட்டுரை சர்வதேச அதிகார வரம்புகளுக்குள் உள்ள இரண்டு வழக்குகளில் கவனம் செலுத்துகிறது. இங்கு, நீதிக்கான பாதை நெடியதாக இருக்கும் என்பதை நினைவில் கொள்வது நல்லது. எந்தளவுக்கு பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை செயற் படுத்த முனைப்பு நடக்கிறதோ அந்தளவுக்கு ரோஹிங்கியா மக்களிற்கான நீதி சாத்தியமாகும்.

## இரு நீதிமன்றங்களில் ஒரு வழக்கு: ஐ.நா. சர்வதேச நீதிமன்றம்

ஐ.நா.வின் முதன்மை நீதிமன்றமான ICJ, நாடுகளுக்கு இடையே ஐ.நா உடன் படிக்கைகள் தொடர்பான பிணக்குகள் மற்றும் சட்டரீதியான உடன்படிக்கைகளில் ஏற்படும் தகராறுகள் மீதான அதிகாரவரம்பைக் கொண்டுள்ளது. அங்கு மியன்மாருக்கு எதிராக ஒரு சர்ச்சைக்குரிய வழக்கை கார்த்திகை 2019இல் காம்பியா தாக்கல் செய்தது. அதில் இனப்படுகொலை குற்றத்தைத் தடுக்கவும் அதை செய்வோரை தண்டிக்கவும் வழி செய்யும் ஐ.நா. உடன்படிக்கையின் கீழ் சர்வதேசத்திற்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பிலிருந்து மியன் மார் விலகிவிட்டது என்று காம்பியா குற்றம் சாட்டியது. இந்த உடன்படிக்கை 1956 ஆம் ஆண்டில் மியன்மாரால் அங்கீகரிக்கப்பட்டது. காம்பியா 1978 இலேயே இந்த உடன் படிக்கையில் இணைந்து கொண்டது.

இந்த வழக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இனப்படுகொலையில் நேரடியாக தொடர்பில்லாத ஒரு நாடு இனப் படுகொலை வழக்கை ICJ முன்கொண்டு வருவது இதுவே முதல் முறை. ICJ இல் இரு கட்சிகளும் 2019 மார்கழியில் வாய்வழி சமர்ப்பிப்புகளைச் செய்தன. மியன்மாரின் ஆங்சான் சூகி போர்க்குற்றங்கள் நடந்து இருக்கலாமே ஒழிய இனப்படுகொலை அங்கு நடக்கவில்லை என்று கூறினார். மியன்மார் தரப்பினர் 2017 பர்மிய இராணுவ நடவடிக்கை ரக்கைன் மாநிலத்தில் சமூக அமைதியின்மையை தணிப்பதை நோக்கமாகக் கொண்டது என்று சொன்னார்கள். மியான்மரின் சட்டக் குழுவின் எந்த உறுப்பினரும் ரோஹிங்கியா என்ற பெயரைக் குறிப்பிடவில்லை. அரக்கான் ரோஹிங்கியா மீட்புபடையால் (Arakan Rohingya Salvation Army) தொடங்கப்பட்ட தாக்குதல்களினாலேயே இராணுவ நடவடிக்கைகள் அவசியமாகின என்ற கூற்றில் மட்டுமே அவர்கள் ரோஹிங்கியா என்ற வார்த்தையை உச்சரித்தனர்.

இதற்கு நேர்மாறாக காம்பியா, ரோஹிங்கி யாக்கள் மீதான நீண்டகால துன்புறுத்தல்கள், அடக்குமுறைகள் மற்றும் அவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை நடவடிக்கைகள், வெகுஜன கொலைகள், சித்திரவதைகள், எரித்தல் மற்றும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் ஆகியவற்றை விவரிக்கும் பெரிய அளவிலான தகவல்களை வழங்கியது.

காம்பியாவின் நீதித்துறை அமைச்சர் அபூபக்கர் மாரி தம்பாடோ (Aboubacarr Marie Tambadou) அவர்கள் தனது தொடக்க அறிக்கையில், காம்பியா கேட்பது என்னவென்றால், எங்கள் கூட்டு மனசாட்சியை உலுக்குகின்ற, இந்த முட்டாள்தனமான கொலைகளை நிறுத்துங்கள், இந்த காட்டு மிராண்டித்தனம் மற்றும் மிருகத்தனமான செயல்களை நிறுத்துங்கள். சொந்த மக்களின் இனப்படுகொலையை நிறுத்துங்கள். என்று குறிப்பிட்டார். ICJ உடனடியாக செய்யப்பட

## "முட்டாள்தனமான கொலைகளை நிறுத்துங்கள், இந்த காட்டுமிராண்டித்தனம் மற்றும் மிருகத்தனமான செயல்களை நிறுத்துங்கள். சொந்த மக்களின் இனப்படுகொலையை நிறுத்துங்கள்"

வேண்டிய இடைக்கால நடவடிக்கைகள் குறித்த தனது முக்கிய முடிவை 23 தை 2020 அன்று வெளியிட்டது. வழக்கத்துக்கு மாறாக அந்த முடிவு அனைத்து 17 நீதிபதிகளாலும் ஒரு மனதாக அங்கீகரிக்கப்பட்டது. ரோஹிங்கியா மக்களுக்கு எதிரான மேலும் துஷ்பிரயோகங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க மியான்மருக்கு இந்த சட்டரீதியான முடிவு கட்டளையிடுகிறது. மேலும் வழக்கு தொடர்பான சாட்சியங்களை அழிப்பதையோ அல்லது சேதப்படுத்துவதையோ தவிர்க்க வேண்டும், இந்த நோக்கங்களை அடைவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ICJக்கு தொடர்ந்து தகவல் அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. இந்த தகவல்கள் ஆரம்பத்தில் 4 மாதங்களுக்குள் தரப்படவேண்டும் என்றும் பின்னர் 6 மாதங்களுக்கு ஒரு முறை செய்யப்படவேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டது. இந்த இடைக்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கட்டளை ICJ கட்டமைப்பிற்குள் ஏற்பட்டிருக்கும் சமீபத்திய வளர்ச்சியாகும். இதனைத் தொடர்ந்து இனப்படுகொலை வழக்கை இறுதி விசாரணைக்காக கட்டியெழுப்புவதற்கான கடின உழைப்பு ஆரம்பமாகிறது. அதற்கான ஆரம்ப மனுக்களை காம்பியா 23 ஆடி 2020 முன்னரும் மியன்மார் 25 தை 2021 அன்றுக்கு முன்னரும் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது.

## இரு நீதிமன்றங்களில் ஒரு வழக்கு: சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்

ICC என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு கடைசிப் புகலிடமாக இருக்க கூடியதாக, 1998 ஆம் ஆண்டின் ரோம் சாசனத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நீதிமன்றமாகும். இங்கு நடைமுறைகள் சற்று வித்தியாசமானவை. ICJ போலல்லாமல், ICC ஆனது அரசுகளின் மீது தீர்ப்பளிக்காது, ஆனால் போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் உட்பட ரோம் சாசனத்தில் பட்டியலிடப்பட்டுள்ள சர்வதேச சட்ட மீறல்கள் செய்த தனிநபர்களை விசாரிப்பதற்கும் தீர்ப்பு வழங்குவதற்குமான அதிகார வரம்பை அது கொண்டுள்ளது. அதற்கென ஒரு காவல் படையோ சிறைச்சாலையோ கிடையாது. சாசனத்தில் கையொப்பமிட்ட நாடுகளே ICC இன் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஒரு ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானம் இல்லாத நிலையிலோ அல்லது ஒரு அரசு அங்கு வழக்கு தொடராத பட்சத்தில் ஒரு வழக்கு ICC இற்கு போக முடியும். ரோம் சாசனத்தில் கையொப்பமிட்டிருக்கும் ஒரு நாட்டின் பிரதேசத்தில் நடக்கும் குற்றங்களை அல்லது அந்த நாட்டு குடிமகன் ஒருவரால் செய்யப்படும் குற்றங்களை விசாரிக்க மட்டுமே ICC இற்கு அதிகாரம் உள்ளது. ICC உடன்படிக்கையில் மியன்மார் அரசாங்கம் கையொப்பமிடவில்லை. ஆனாலும், ரோஹிங்கியா வழக்கு என்பது ICC யின் அதிகார வரம்பிற்குள் வரும் குற்றங்களை உள்ளடக்கியது. ஏனெனில் குறிப்பாக மனித குலத்திற்கு எதிரான நாடு கடத்தும் குற்றம் மியன்மாரில் தொடங்கினாலும் அதனால் பாதிக்கப்பட்ட பர்மிய ரோஹிங்கியா மக்கள் வங்கதேசத்திற்கு வந்து சேர்ந்துள்ளார்கள். வங்கதேசம் ரோம் சாசனத்தில் கையொப்பமிட்டுள்ள ஒரு நாடு.

மியன்மாருக்கு எதிராக ஒரு வழக்கை தொடரவேண்டும் என்ற ICC இன் வழக்கு தொடுனரின் கோரிக்கையை 2019 ஆடி மாதம் ICC நீதிபதிகள் பெற்றனர். மேலும், பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களின் முறைப்

> “இது போன்ற ஒட்டுமொத்த மற்றும் திட்டமிட்ட முறையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் கவனிக்கப்படாமலோ அல்லது தண்டிக்கப்படாமலோ போகாது”

பாடுளை அவர்கள் கேட்டனர். இதனையடுத்து 2019 கார்த்திகை 14 அன்று ICC நீதிபதிகள் இந்த வழக்குக்கான விசாரணையைத் தொடங்க அனுமதித்தனர்.

மேலே குறிப்பிட்டவாறு இந்த நிலைமை விசித்திரமானது, ஏனெனில் வங்காளதேசம் ரோம் சாசனத்தில் கையொப்பமிட்ட ஒரு கட்சியாக இருந்தாலும், மியன்மார் அப்படி இல்லை. வழக்கமான நடைமுறைகளில், மியன்மாரில் செய்யப்படும் குற்றச்செயல்கள் மீதான வழக்குகள் ICCயின் முன் ஏற்றுக்கொள்ளப்படாது, ஏனெனில் அவை அதன் அதிகார வரம்பிற்கு வெளியே வரும்.

எவ்வாறாயினும், இந்த வழக்கில், குற்றம் தொடர்பான தனது வியாக்கியானத்தை ICC விரிவுபடுத்தி உள்ளது. அதாவது மனித குலத்திற்கு எதிரான குற்றத்தில் குறைந்த பட்சம் ஒரு பகுதியாவது வங்காளதேசத்தின் பிரதேசத்தில் (அல்லது ரோம் சாசனத்தை ஏற்றுக் கொண்ட அங்கத்துவ நாடு ஒன்றின் பிரதேசத்தில்) நடந்திருக்கின்றமையால் அக் குற்றம் மீதான விசாரணையை நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. பர்மிய ரோஹிங்கியா மக்கள் மீது நடத்தப்படும் குற்றங்கள் வங்காள தேசத்துடன் போதிய அளவுக்கு தொடர்புபட்டு இருப்பதால் அக்குற்றங்களை செய்தவர்கள் மீதான விசாரணை அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆனாலும் மேற்கொள்ளப்பட முடியும். இவ்வாறாக ICC இன் குறை நிரப்பு மற்றும் ஒத்துழைப்பு பிரிவின் இயக்குனர் பாகிசோ மொசொசொகோ (Phakiso Mochochoko) இதனை விளக்கி உள்ளார். இதனடிப்படையில், ICC வழக்கு தொடுனரின் அலுவலகம் தற்பொழுது உண்மையை கண்டறிவதற்கும் அதற்கான ஆதாரங்களை சேகரித்து வழக்குகளை கட்டமைக்கவும் வேண்டிய பணிகளில் ஈடுபட்டுள்ளது.

## அடுத்து என்ன?

ஐ.நா. சர்வதேச நீதிமன்றத்தின் (ICJ) இன் முடிவு உலகளாவிய ரீதியில் ரோஹிங்கியர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. மேலும் இது போன்ற ஒட்டுமொத்த மற்றும் திட்டமிட்ட முறையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் கவனிக்கப்படாமலோ அல்லது தண்டிக்கப்படாமலோ போகாது என்ற தெளிவான செய்தியையும் இது உலகுக்கு சொல்லியுள்ளது. ‘நீதி இன்றி சமாதானம் இல்லை’ என்ற அமைப்பும் வேறு அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் சேர்ந்து நடத்திய ரோஹிங்கியா பற்றிய நோக்குகள் தொடர்பான கலந்துரையாடலில் ரோஹிங்கியா ஆர்வலர்கள் ICJ தீர்ப்பு தொடர்பாக தமது திருப்தியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்கள். சிறிய வெற்றியாக இருந்தாலும் இது குறிப் பிடத்தக்கது எனவும் இந்த செயற்பாட்டின் வேகத்தை தணிய விடக்கூடாது என்றும் கூறினார்கள். முக்கியமாக, இனப்படுகொலை உடன்படிக்கையின் (Genocide Convention) கீழ் ரோஹிங்கியாக்களை பாதுகாக்கப்பட்ட இனக்குழுவாக ICJ அங்கீகரித்துள்ளது.

எவ்வாறாயினும், மியன்மார், ரோஹிங்கியா மக்களுக்கு எதிரான எந்தவொரு இனப்படு கொலையும் செய்யவில்லை என்று உறுதியாக மறுத்து வருகிறது. 2017 சம்பவங்கள் குறித்து உள்நாட்டு சுயாதீன விசாரணை ஆணையம் (Independent Commission of Enquiry, ICOE) மூலம் தாங்கள் சொந்த விசாரணையை மேற் கொள்கிறோம் என்று கூறி வருகிறது. ICJ தனது இடைக்கால நடவடிக்கைகள் குறித்த தீர்ப்பை வெளியிடுவதற்கு சற்று முன்னதாக, ICOE ஒரு அறிக்கையை வெளியிட்டது.

போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கலாம் என்பதை ஒப்புக்கொண்டாலும், அவற்றில் இனப்படுகொலை நோக்கம் எதுவும் கண்டறியப்படவில்லை என்று சொல்லியது. ICJ குற்றச்சாட்டுகளை மழுங்கடிப்பதற்கான முயற்சியே இது என்று தெளிவாக தெரிந்தது. ரோஹிங்கியா ஆர்வலர் யாஸ்மின் உல்லா (Yasmin Ullah) இந்த நடவடிக்கையை அட்டூழியங்களில் இருந்து தப்பிக்க சூகியின் அரசாங்கம் செயல்படுத்திய "புதிய ஊடக உத்தி" என்று வரையறுத்தார்.

இதற்கிடையில், ICJ இடைக்கால நடவடிக்கைகளை அறிவித்திருந்த போதிலும் ரோஹிங்கியா மக்கள் இன்னும் இனப்பாகுபாடு காட்டப்பட்டு மியன்மார் இராணுவப் படைகளால் குறிவைக்கப்படுகிறார்கள். பர்மிய இராணுவத்தின் தலைமை தளபதி, இந்த நடவடிக்கைகள் குறித்து, மியன்மார் தற்போதுள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்தார். அதாவது, இந்த சூழ்நிலையை முதலில் உருவாக்கிய சட்டங்களையே தொடர்ந்தும் பயன்படுத்தப் போவதாக கூறி உள்ளார். தை மாதத்தில் மியன்மார் தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளரான யாங்கி லீ (Yanghee Lee) மியன்மாருக்குள் செல்வதற்கான அனுமதியை மியன்மார் மறுத்தது. அதனால் அவர் தாய்லாந்து மற்றும் பங்களாதேஷில் இருந்து தனது உண்மை கண்டறியும் பணியை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனவே, ICJ இன் முடிவு ரோஹிங்கியாக்களுக்கு எந்த வகையில் அர்த்தப்பட்டாலும், மியன்மார் உண்மையில் அந்த உத்தரவுக்கு இணங்குவதை உறுதி செய்வது சவாலாக இருக்கும். மேலும் மியன்மார் அதற்கு இணங்குமாறு அழுத்தம் கொடுக்க சர்வதேச சமூகம் ஒன்றுபட்டு உறுதியாக நிற்க வேண்டும். அவ்வாறு செய்வதற்கு 2020 ஆம் ஆண்டு மாசி மாதத் தொடக்கத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்த போதும் அது தவறவிடப்பட்டதை இங்கே குறிப்பிட வேண்டும். ICC இல் உள்ள வழக்கைப் பொறுத்தவரை, அவர்களின் விசாரணைகளை முடிக்கவும், தனிப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குகளை உருவாக்கவும் கணிசமான நேரம் எடுக்கும். குற்றமிழைக்கப்பட்டவர்களையும் குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களையும் தொடர்பு கொள்வதில் ICC இற்குள்ள ஆற்றல் மிகவும் சவாலுக்கு உட்படுத்தப்படும். அதாவது, அவர்கள் ரோஹிங்கியாக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் தமது வேலைகளை மேம்படுத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.




இவ்வாறான சவால்கள் இருந்த போதிலும், தற்போது இரண்டு நீதிமன்றங்களிலும் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. குறிப்பாக அவற்றின் குறியீட்டுச்செய்தி முக்கியமானது. ICJ, ICC மற்றும் பிற இடங்களில் உள்ள வழக்குகள் இறுதியாக ரோஹிங்கியாக்களுக்கு நீதி கிடைக்குமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளன.

குற்றவாளிகள் தண்டிக்கப்படல், பொறுப்புக் கூறல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைத்தல் என்பவை மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இப்போதைக்கு, குறைந்த பட்சம், ஒரு செய்தி தெளிவாக உள்ளது. அதாவது, மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மறைக்கப்பட மாட்டாது என்பதே அது. அதற்கு நிலையான அர்ப்பணிப்பும் பொதுவான முயற்சிகளும் இப்போது தேவைப்படுகின்றன.

# தமிழ்த் தலைமைகள் கோரும் சமஷ்டி முறையும் அதற்கான போராட்ட வழிவகையும் –பகுதி 2

தொகுப்பு - ரஜீந்தினி

**ஈழத்தமிழ் அரசியல் வரலாற்றறிஞர் மு.திருநாவுக்கரசு அவர்களால் 13.03.2022 அன்று நடாத்தப்பட்ட தமிழ் தலைமைகள் கோரும் "சமஷ்டி முறையும் அதற்கான போராட்ட வழிமுறையும்" என்கிற உரையாடல் வகுப்பின் இரண்டாம் பகுதி இங்கே பிரசுரமாகிறது.**

அடுத்ததாக, ஈழத்தமிழர்களின் மத்தியில் இன்று பேசப்படும் சமஸ்டி கோரிக்கையினுடைய வரலாறை சுருக்கமாக பார்ப்போம். முதல் முறையாக சிங்கள தலைவர்கள் தான் இந்த சமஸ்டியை பற்றி பேசுகிறார்கள். பண்டாரநாயக்காவும் கண்டி சிங்களவர்களும் தான் பேசுகிறார்கள். தமிழ் தலைவர்கள் பேசவில்லை. இலங்கையில் உருவாக்கப்பட்ட முதல் இரண்டு கட்சிகளும் இடதுசாரித் தன்மையானவை. லங்கா சமஜமாஜ கட்சி 1935ஆம் ஆண்டு, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1943ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டன. இவை இரண்டும் இடதுசாரி கட்சிகள். இவர்கள் சமஸ்டியை பற்றி பேசவில்லை. அவர்கள் ஒற்றை ஆட்சியைத்தான் பேசுகிறார்கள்.

அதற்கு பின்பு மூன்றாவதாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கையினுடைய மூன்றாவது பெரிய கட்சி தமிழ்மக்களினுடைய முதலாவது கட்சி. அது இலங்கை தமிழ் காங்கிரஸ். 1944ஆம் ஆண்டு ஒற்றை ஆட்சி கொள்கையை மட்டுமே அதுவும் முன்வைத்தது. ஒற்றையாட்சியின் கீழ் 50 க்கு 50 என்கிற கோரிக்கையை முன் வைத்தது. எனவே இலங்கையினுடைய மூன்று பெரிய கட்சிகளும் ஒற்றை ஆட்சியை பற்றியே பேசின. அதன் பின்பு 1946ஆம் ஆண்டு தோன்றிய ஐக்கிய தேசிய கட்சி ஒற்றை ஆட்சியின் கீழ் அரசியல் யாப்பை உருவாக்கி அதன் கீழ் நிர்வாக பொறுப்பை ஏற்று, ஆட்சி பொறுப்பை ஏற்று ஒற்றை ஆட்சியை நடைமுறைப்படுத்தியது. தமிழர்களையும் இணைத்து அது ஒற்றை ஆட்சியை



இறுக்கமாக வளர்த்து எடுத்தது.

டி.எஸ்.சேனநாயக்கா தமிழர்களையும் இணைத்துத்தான் ஒற்றை ஆட்சியை வளர்த்து எடுத்தார் என்பதை தமிழர்கள் கருத்தில் கொள்ள தவற கூடாது. லங்கா சமஜமாஜ கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி, சிறீலங்கா சுதந்திர கட்சி, இந்த ஐந்து கட்சிகளும் ஒற்றை ஆட்சி கொள்கையை கொண்டவை தான். இதற்கு இடையில் 49ஆம் ஆண்டு தொடங்கிய சமஸ்டி கட்சி தமிழரசுக் கட்சி என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு அறிமுகமாகியது. அந்த பெயரை முன்வைத்தவரே நவாலியூர் சோமசுந்தர புலவரின் பேரன் இளம் முருகனார்.

1949ஆம் ஆண்டு உருவான தமிழரசு கட்சிதான் இலங்கையில் தமிழர்கள் பக்கத்தில் முதல் முறையாக ஒரு அமைப்பு ரீதியாக சமஸ்டியை முன்வைத்தது. தந்தை செல்வா சமஸ்டி முறையை முன்வைத்து 49ஆம் ஆண்டு

***“வரலாறு நடைமுறையினால் மெய்பிக்கப்படுமே தவிர எந்த ஒரு இலட்சிய பிரகடனங்களினாலும் சத்தியங்களினாலும் அது மெய்பிக்கப்படமாட்டாது”***

ஆற்றிய உரை ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. செல்வநாயகத்தினுடைய அந்த உரைக்கு மிக சிறப்பான அம்சங்கள் உண்டு. அப்படி ஒரு கோரிக்கையை முன்வைத்து “நேரடி போராட்டத்தின் மூலம் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும்” என்ற கருத்தை முன் வைத்த தந்தை செல்வநாயகம் 57ஆம் ஆண்டு பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் போது சமஸ்டி கோரிக்கையை கைவிட்டு விட்டார். பண்டா-செல்வா ஒப்பந்தம் என்பது இலங்கையை மூன்று பிராந்தியங்களாக பிரித்து சமஸ்டி அல்லாத பிராந்திய சபைகளை அமைப்பது என்பதை அடிப்படையாக கொண்டது.

எனவே எங்களுக்கு தந்தை செல்வா என்ன சொன்னார் என்பதை விடவும் என்னத்தை பிரகடனப்படுத்தினார் என்பதை விடவும் வரலாற்றில் எப்படி நடந்து கொண்டார் என்பதுதான் முக்கியம். வரலாறு நடைமுறையினால்தான் மெய்பிக்கப்படுமே தவிர எந்த ஒரு இலட்சிய பிரகடனங்களினாலும் சத்தியங்களினாலும் அது மெய்பிக்கப்பட மாட்டாது. அதாவது, நடைமுறையில் அவர் 1957 ஆம் ஆண்டு அந்த ஒப்பந்தத்தை எழுதி கையெழுத்து இட்ட போது சமஸ்டி கோரிக்கையிலிருந்து கீழே இறங்கி பிராந்திய சபை என்று வந்துவிட்டார். அதைக்கூட சிங்கள தலைவர்கள் கிழித்து எறிந்து விட்டார்கள்.

அடுத்ததாக 65ஆம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தத்தின் போது பிராந்திய சபைகளையும் கைவிட்டு மாவட்ட சபைகளுக்கு வந்தார். இருபத்தைந்து மாவட்டங்கள் இலங்கையில் உள்ளன. தமிழ் மண் வடக்கு கிழக்கில் ஏழு மாவட்டங்கள். எனவே இது ஒரு நிர்வாக ஏற்பாடு. எனவே அவர் சமஸ்டி கோரிக்கையை 57ஆம் ஆண்டு கைவிட்டு 65ஆம் ஆண்டு இன்னும் கீழே போனார். டட்லி-செல்வா ஒப்பந்த காலத்தில் பொன்னம்பலம் செல்வநாயகம் ஆகிய இரண்டு தமிழ் தலைவர்களும் ஒரு அங்கமாகதான் இருந்தனர். பொன்னம்பலம் ஒற்றை ஆட்சி என்கிறார். செல்வநாயகம் சமஸ்டி என்று சொன்னாலும் மாவட்ட சபைகளை ஏற்றுக்கொள்கிறார்.

சமஸ்டி கோரிக்கையை முன்வைத்து பெரும் தலைமைத்துவம் ஒன்று தமிழ் மக்களின் மத்தியில் உருவாகி இருந்தது. 1956ஆம் ஒற்றை ஆட்சியை முன்வைத்த தமிழ் காங்கிரஸ் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டது. அந்த கட்சி தோற்கடிக்கப்பட்டாலும் அந்த கொள்கையில் மாற்றமில்லை. அப்படியே 1965ஆம் ஆண்டு வந்த அரசாங்கத்தின் கீழும் அது ஒற்றை ஆட்சி கொள்கையோடு நிற்கிறது.

சமஸ்டி கோரிக்கையை முன்வைத்த பெரும் தலைமைத்துவம் செல்வநாயகம் வழியில் சமஸ்டி கொள்கையை கைவிட்டு ஒற்றை ஆட்சியோடு இணைந்து செயல்பட்டது. 5 வருடங்கள் அமைச்சரவையில் பங்கெடுத்தது. இந்த பங்கெடுத்தல் தான் அரசியல் யாப்பு. எல்லோரும் அரசியல் யாப்பை பற்றி கற்பதில் பெரும் தவறு செய்கிறார்கள். அரசியல் யாப்பு என்பது எழுதப்பட்ட வரிகள் என்று நினைத்து கொள்கிறார்கள். நடைமுறைதான் அரசியல் யாப்பு. தீர்ப்புக்கள்தான் அரசியல் யாப்பு. நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் சட்டங்கள் ஒவ்வொன்றும் அரசியல் யாப்பு. அரசியல் யாப்பை அதன் செயல் வடிவத்தின் ஊடாக அடையாளம் காண்பதுதான் முக்கியம்.

செல்வநாயகத்தின் செயல் வடிவம் மாவட்ட சபைக்குள்ளே போய்விட்டது. அதுவும் நிறைவேறவில்லை. இதன் பின்பு 70 ஆம் ஆண்டு தேர்தலில் இரண்டு தமிழ் கட்சிகளும் தேர்தலை எதிர்கொண்டன. ஆயினும் செல்வ நாயகத்தின் தலைமையிலான தமிழரசு கட்சியையே மக்கள் ஆதரித்தார்கள். தமிழ் காங்கிரசுக்கு மூன்று ஆசனங்களே கிடைத்தன. ஏனைய ஆசனங்கள் பதின்மூன்றும் தமிழரசு கட்சிக்கு கிடைத்தன.

# "தமிழ் மக்களுக்கு ஒரு தனி இராச்சியம் வேண்டும்"

1956ஆம் ஆண்டு தேர்தலை எதிர் கொண்ட காலத்தில் சி.சுந்தரலிங்கம், எஸ். நடேசன், ஜி.ஜி.பொன்னம்பலம் என்கின்ற மூவரையும் இணைத் தலைவர்களாக கொண்டு தனிநாட்டு கோரிக்கையோடு தமிழர் மாகாண சபை ஆரம்பிக்கப்படுகிறது. தேர்தலில் தாங்கள் வெற்றி பெற்றால் தாங்கள் தமிழர்களுக்கு ஒரு தனி இராச்சியம் வேண்டும் என்ற வகையில் போராடுவோம் என்று இவர்கள் மக்களுக்கு வாக்குறுதி அளித்து அறிக்கை வெளியிட்டார்கள். இந்த அறிக்கையை வெளியிட்டவர் தமிழர் மகாசபையின் அமைப் பாளராக இருந்த ஆ.தியாகராஜா என்பவர். தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இவர் பாராளுமன்ற உறுப்பினராக வட்டுக்கோட்டை தொகுதியிலிருந்து பிற்காலத்தில் தெரிவு செய்யப்பட்டவர். இவர் பொருளாதாரத்தில் கலாநிதி பட்டம் பெற்று இருந்தவர். பின் நாட்களில் ஒரு கல்லூரியின் அதிபராக இருந்தவர். இவர் அமைப்பாளராக இருக்கும் போதுதான் தமிழ் மக்களுக்கு ஒரு தனி இராச்சியம் வேண்டும் என்கின்ற அறிக்கையை எழுதினார்.

அந்த அறிக்கை 1956 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஆனால், தேர்தல் முடிந்ததும் அப்படியே கைவிடப்பட்டது. இதன் பின்பு 57ஆம் ஆண்டு ஆ.தியாகராஜா "இருபத்து நான்கு இலட்சம் தமிழ் மக்களுக்கு ஒரு தனி இராச்சியம் வேண்டும்" எனும் தலைப்பில் ஒரு சிறிய நூலை எழுதுகிறார். அப்பொழுது தமிழ் ஈழம் என்கிற கோரிக்கை வரவில்லை. இந்த நூலை 1982 ஆம் ஆண்டு திருமதி ஆ.தியாகராஜாவை அவர் வீட்டில் சந்தித்து, வாங்கி, முக்கியமான நூலகங்களுக்கு அதன் பிரதியை கொடுத்தேன். இந்த நூல்தான் தனி நாடு வேண்டும் என்று ஈழத்தமிழர்கள் பற்றி எழுதப்பட்ட முதலாவது நூல். இந்த நூலில் மலையகம் உள்ளடக்கப்பட்டிருந்தது. மலையக பிரதேசத்தை கிழக்கு மாகாணத்துடன் புவியியல் ரீதியாக இணைத்த அட்டைப்படம்தான் இந்த நூலினுடைய அட்டைப்படம். இதில் பதுளை தமிழ் ஈழத்தின் ஒரு பகுதியாக புவியியல் ரீதியாக இணைக்கப்பட்டிருத்தது.

இதன் பின்பு, 1963 ஆம் ஆண்டில் சி.சுந்தரலிங்கம் ஆங்கிலத்தில் Eylom: Beginnings of the Freedom Struggle என்கின்ற ஒரு நூலை எழுதி இருந்தார். அந்த புத்தகத்தில் ஒரு பெறுமதியான பகுதி இருக்கிறது. சோல்பரி பிரபு எழுதிய கடிதங்களை கொண்ட பகுதிதான் அது. அதில் சோல்பரி பிரபு தான் எழுதிய அரசியல் யாப்பில் விடப்பட்ட தவறுகளை எழுதுகிறார். அவர் வரலாற்றில் தான் மிகப்பெரும் பாவி என்று சொல்வதை போல உள்ளது. அது ஒரு பாவமன்னிப்பு போன்று தான் தவறு செய்து விட்டேன் என்று சொல்கிறார். அந்த தவறை அவர் Bertram Hughes Farmer இன் Ceylon A Divided Nation என்கிற நூலில் அதை விட ஆழமாக எழுதி இருக்கிறார். நான் இலங்கை அரசியல் யாப்பில் ஒரு டி.எஸ் சேனநாயக்காவை நம்பி கெட்டு போனேன் என்று சொல்கிறார். அவரை தான் நம்பினேன் என்றும் அவர் இல்லாதபட்சத்தில் இலங்கை அரசியல் கலாச்சாரம் அழிந்து போய் விட்டது என்று சொல்கிறார். அதாவது, அரசியல் கலாச்சாரம் ஊடாகதான் அரசியல் யாப்பை பார்க்க வேண்டும் என்கிற சிந்தனையை அவர் அதில் சொல்கிறார். இவ்வாறு சுந்தரலிங்கத்தினுடைய புத்தகம் பல தகவல்களை சொல்கிறது.


மேலும், முதல் முறையாக ஈழம் என்ற சொல்லை பிரயோகித்தவர் சி. சுந்தரலிங்கம். அவர் ஈழம் என்கின்ற சொல்லை ஆங்கில உச்சரிப்பில் எழுதுவதாக இருந்தால் EYLOM என்று வரும் என்ற வகையில் அந்த சொல்லை தலைப்பில் வைத்து அந்த நூலை எழுதி இருந்தார். இதன் பின்பு செல்வநாயகத்தி னுடைய மூளையாக செயற்பட்டவர் கோ. வன்னியசிங்கம் என்பவர்தான். அவருக்கு பின்பு செல்வநாயகத்தின் மூளையாக செயற்பட்டவர்

வி.நவரட்ணம். இவர் செல்வநாயகத்தோடு அந்நியோன்னியமாக இருந்தார்.

செல்வநாயகம் சொல்வதை கேட்பார். சத்தியாகிரகம் சம்பந்தமான போராட்டத்தில் செல்வநாயகத்தின் ஆலோசகராகவும் அதன் பிரச்சனைகளில் நெருக்கமாக சம்பந்தபட்டவரா கவும் வி.நவரட்ணம் இருந்தார். சரி இதன் பின்பு நவரட்ணம் செல்வநாயகத்தோடு முரண்பட்டு தமிழரசு கட்சியை விட்டு வெளியேறுகிறார். மு.திருச்செல்வத்தின் வருகையும் அவர் செல்வ நாயகத்தின் மூளையாக மாறியதால் ஏற்பட்ட அரசியல் பின்னணியில் தமிழரசு கட்சியை விட்டு வி.நவரட்ணம் வெளியேறுகிறார்.

தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறிய பின்பு, வி.நவரட்ணம் 1969 ஆம் ஆண்டு தமிழரசு ஆட்சி கழகம் என்கின்ற ஒன்றை ஆரம்பிக்கிறார். இது தான் தமிழ் ஈழ கோரிக்கை சம்பந்தமாக உருவாக்கப்பட்ட முதலாவது கட்டமைக்கப்பட்ட ஒரு அமைப்பு. இதன் பின்பு 1991ஆம் ஆண்டு வி.நவரட்ணம் "The Fall And Rise Of The Tamil Nation" என்கின்ற ஒரு நூலை எழுதி இருக்கிறார்.

1972ஆம் ஆண்டு வந்த பின்பு இலங்கை அரசியல் யாப்பில் ஒரு வினோதமான நிலைமை உருவாகிறது. இலங்கையில் சோல்பரி அரசியல் யாப்பில் ஒற்றை ஆட்சி, இரட்டை ஆட்சி என்ற சொல் பிரயோகங்கள் இல்லை. சமஸ்டி என்ற பத பிரயோகமும் இல்லை. சோல்பரி அரசியல் யாப்பில் இரு சபைகளை கொண்ட இலங்கை அரசுதான் இருந்தது. நாடாளுமன்றம் என்பது பிரதிநிதி சபையையும், செனட் சபையையும் கொண்டது. சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவிக்கு வந்த 72ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பில் திட்டவட்டமாக ஒற்றை ஆட்சிதான் என அரசியல் யாப்பு பதம் பிரயோகிக்கப்பட்டது. இந்த யாப்பை எதிர்த்துதான் தமிழரசு கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் தோட்ட தொழிலாளர் காங்கிரசும் ஒன்று சேர்கின்றன.1972ஆம் ஆண்டு மே மாதம் "தமிழர் ஐக்கிய கூட்டணி" (TUF) என்ற அமைப்பை உருவாக்குகிறார்கள். 1976ஆம் ஆண்டு மே மாதம் பதினான்காம் திகதி வட்டுக்கோட்டை தீர்மானம் வருகிறது.




தனி நாட்டுக்கோரிக்கை முன்வைக் கப்படுகிறது. அப்போது தோட்ட தொழிலாளர் காங்கிரஸ் அதிலிருந்து விலகி சென்றுவிட்டது. இப்போது இதுவரை சமஸ்டி கோரி வந்தவர்களும் ஒற்றை ஆட்சிதான் வேண்டும் என்று கோரி வந்தவர்களுமாக இருவரும் இணைந்து 76ஆம் ஆண்டு தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறார்கள். 44 ஆம் ஆண்டிலிருந்து 76ஆம் ஆண்டு வரைக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினுடைய தெளிவான கொள்கை அவர்களுடைய நடைமுறை சார்ந்த கொள்கை ஒற்றை ஆட்சிதான்.

செல்வநாயகத்தினுடைய 1949ஆம் ஆண்டிலிருந்து எழுத்தளவில் சமஸ்டி என்று இருந்தாலும் அவருடைய நடைமுறை சார்ந்த கொள்கை செயற்பாடு ஒற்றை ஆட்சி தான். ஆனால் சமஸ்டிதான் வேண்டுமென்று கோரியவர்களும் சமஸ்டி வேண்டாம் ஒற்றை ஆட்சிதான் வேண்டும் என்று கோரியவர்களும் இரண்டு பகுதியினரும் இணைந்து 1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி வட்டுக்கோட்டை தீர்மானத்தில் முற்று முழுவதும் சிங்கள அரசில் இருந்து பிரிந்து நின்று தனி அரசை அமைத்தல் என்கிற வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இந்த தீர்மானத்தில் இரண்டு நாடு என்பது தெளிவாக் கப்பட்டிருக்கிறது.

அடுத்த இதழில் தொடரும்...

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

இருப்பு என்பவை ஒரு ஐந்து வருடங்கள் பத்து வருடங்களில் தகர்க்கப்படும். எங்க ளுக்கு கடற்கரையோரங்களில் உள்ள உரிமையும் கடல் மீது வளங்களின் மீது உள்ள உரிமையும் இல்லாது செய்யப்படும். உள்ளூர் சமூகங்களை காட்டிற்குள் இயற்கை வளங்களுக்குள் செல்ல முடியாது மறித்து விட்டு நடு காட்டுக்குள் போய் கள்ள மரம் அரிந்து மரங்களை பொருளாதார பண்டமாய் ஏற்றுமதி செய்கின்ற பெரும் முதலாளிகளை இவர்கள் காப்பாற்றுகின்றார்கள். அதே போன்று தான் கடற்கரை எங்கள் கையை விட்டு போகும் போது நாங்கள் கடற்கரைக்கு போக முடியாமல் போகும். கடலுக்கு போக முடியாமல் போகும். இப்பொழுது எங்களுடைய இயலுமையை மட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள். பல நாள் படகுகளை கொண்டு நாங்கள் ஆழ்கடலுக்கு போக முடியாமல் எங்களுடைய இயலுமையை சவாலுக்கு உட்படுத்தி இருக்கின்றார்கள். இந்திய இழுவைப்படகுகளை இங்கு அனுமதிப்பதன் மூலம் இப்பொழுது எங்களுடைய இயலுமையை இன்னொரு திசையில் முடக்க போகின்றார்கள். கரையோரங்களில் கடலட்டை பண்ணைகளை போடுவதன் மூலமாக சிறு கடல் தொழிலை இல்லாமல் செய்து எங்களுடைய சமூகத்தின் இருப்பையே இல்லாமல் செய்ய போகின்றார்கள். தமிழ் சமூகம் கடலின் மீது கொண்டு இருக்கின்ற ஆளுகையை அந்த ஆளுகைக்கான வலிமையை தகர்ப்பதற்கான நீண்ட கால திட்டமாக தான் என்னால் இதை இலங்கையில் இருந்து புரிய முடிகின்றது.

ஒரு சமூகத்திற்கு ஒரு மனிதனுக்கு சொந்தமான வளத்தை அவனுடைய அனுமதி இன்றி இன்னொருவர் பயன்படுத்துவது என்பது மிக பெரிய திருட்டு. இங்கே நடப்பது அது தான். இன்றைய பொருளாதாரம் யுத்தத்திற்கு பிறகு கொஞ்சம் நலிந்து போய் சமூகத்திற்குள் சில இலட்சம் ரூபாய்களை எறிந்து அந்த

***“எங்களுடைய சமூகத்தின் இருப்பையே இல்லாமல் செய்ய போகின்றார்கள்”***

பிரதேசங்களை கையகப்படுத்துகின்றார்கள். ஆரம்பத்தில் அவர்கள் சொல்லலாம் உள்ளூர் மீன்பிடியாளர்கள் தான் இந்த பண்ணைகளை செய்கின்றதாக, அது ஒரு கேள்விக்குரிய விடயமாக தான் இருக்கிறது. முன்பு 70களில் சுற்றுலா துறை விரிவாக்கம் செய்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் நிரம்ப கடற்கரையோரங்களில் சுற்றுலா விடுதிகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டது. கரையோரங்களை அண்டியதாக கட்டப்பட்ட அந்த விடுதிகளுக்கு முன்னால் உள்ள கடற்கரை பிரதேசங்களையும் பயன்படுத்துவதற்கான சிறப் புரிமை வழங்கப்பட்டது. குறிப்பாக திருகோணமலையில் நிலாவெளி போன்ற கடற்கரைகளில் அந்த விடுதி உரிமையாளர்கள் அந்த பிரதேசங்களை சுத்தமாக பாதுகாத்து சுற்றுலா பயணிகளுக்கு கொடுக்க வேண்டும் என்பதற்காக உள்ளூர் மக்களை அந்த கடற்கரை பிரதேச பகுதிகளுக்குள் அனுமதிக்காமல் மறுத்தார்கள். மிக பெரிய சங்கடமான நிலைமை தோற்றுவிக்கப்பட்டது.

அதே போன்றுதான் இன்று சிறு சிறு தொழிலாளர்கள் கடலட்டை பண்ணை உரிமையாளர்களாக இருப்பார்கள். கொஞ்சம் இந்த பண்ணை சோர்வுறும் பொழுது ஒரு பெரிய முதலாளியின் பெயரால் ஒரு பல்தேசிய கம்பெனியோ ஒரு தேசிய கம்பெனியோ வந்து எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து தாங்கள் வாங்குவார்கள். பொருளியலில் வினைத்திறன் என்பது முக்கியமானது. வினைத்திறன் கொண்டதாக தொழில் இருக்க வேண்டும் என்று சொன்னால் குறைந்தபட்ச அளவு என்று ஒன்று இருக்க வேண்டும். குறைந்தபட்ச உற்பத்தி அளவு இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் நீங்கள் தனித்தனியே வைத்து பராமரித்தால் கஷ்டம், நாங்கள் அது எல்லாவற்றையும் எடுத்து ஒரு கம்பெனியாக செய்ய போகின்றோம் என்று சொல்வார்கள். அப்படி செய்ய ஆரம்பித்தால் இந்த பண்ணைகள் எல்லாம் பின்பு உள்ளூர் சமூகத்திற்கு சொந்தம் அல்லாத யாரோ ஒரு பல்தேசிய கம்பெனிக்கோ அல்லது தரகு முதலாளித்துவத்திற்கோ போகும். அதனூடாக எமது கடலின் மீதான எமது இறைமையை நாம் இழப்போம்.

# இலங்கையின் எதிர்கால இருப்பு சீனாவின் நலன்களையும் உள்ளடக்கியதே




பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்

இலங்கைத் தீவின் மீதான இந்தியாவின் அணுகுமுறையும் சீனாவின் அணுகுமுறையும் தனித்துவமானவை. சீனாவைப் பொறுத்தவரையில் ஒரு நீண்ட செயற்பாட்டு ஊடாக, நீண்ட ஒத்துழைப்பு ஊடாக, அல்லது நீண்ட கடன் பொறிக்கு ஊடாக தன்னுடைய செல்வாக்கை உலகளாவிய ரீதியில் விஸ்தரித்து கொண்டு வருகிறது. அதில் ஒரு வெற்றிகரமான சூழலை அது ஏற்படுத்திக் கொண்டுள்ளது. குறிப்பாக அதனுடைய பட்டுப்பாதைத் திட்டம் (silk road project) முக்கியமானது. அதனூடாக உலகளாவிய ரீதியான இணைப்புக்கு ஒரு களத்தை சீனா ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

சீனாவின் முத்துமாலைத் தொடர் திட்டம் (string of pearls project) இந்து சமுத்திரத்தை மையப்படுத்தி இருந்தாலும் பட்டுப்பாதை பெருமளவுக்கு ஆசிய ஆபிரிக்க நாடுகளை ஐரோப்பிய நாடுகளை அல்லது லத்தீன் அமெரிக்க நாடுகளை சீனாவுடன் இணைப்பதற்கான பாதையை வகுத்திருக்கின்றது. இப்படியான பின்னணியில் தான் சீனா இலங்கைத்தீவில் ஏறக்குறைய 1952 முதல் ராஜதந்திர ரீதியிலான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அன்றிலிருந்து சீனாவின் அணுகுமுறை இலங்கையோடு நெருக்கமானதாகவும் அதனுடன் ஒத்துழைத்துப் போகும் நோக்கு நிலையிலும் தான் முதன்மைப் படுத்தப்பட்டிருக்கிறது.

உலகளாவிய வல்லரசுகள் எப்படி இலங்கைத் தீவையும் அதனூடாக இந்து சமுத்திரத்தின் மையப்பகுதியை தமது ஆதிக்கத்தை வைத்துக் கொண்டனவோ அதே போன்று படிப்படியாக இலங்கையை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு சீனாவின் அணுகுமுறை 2022 ஆம் ஆண்டு வரை வெற்றிகரமான ஒன்றாக இருக்கின்றது. ஆரம்ப காலகட்டத்தில் அம்பாந்தோட்டையை மையப்படுத்தி தென் இலங்கையில் விரைவுப் பாதைகள், போக்குவரத்து, மற்றும் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் என்ற அடிப்படையில் சீனாவின் அணுகுமுறை இருந்தாலும் படிப்படியாக அது வடக்கு கிழக்கையும் நோக்கி நகர ஆரம்பித்துள்ளது. தன்னுடைய செல்வாக்கை அதிகரிக்க அபிவிருத்தி சார்ந்து பொருளாதார ரீதியான அம்சங்களை கொண்டு இருக்கக்கூடிய ஒத்துழைப்புகளை எடுத்திருக்கின்றது.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக சுதந்திர காலப்பகுதியில் இந்தியர்கள் புவிசார் அரசியல் கட்டமைப்புகள் சார்ந்து ஒரு நெருக்கமான உறவையும் பரிச்சயத்தையும் இலங்கையோடு வைத்து இருந்தார்கள். இலங்கைத் தீவோடு இந்தியர்களுக்கு இருந்த அத்தகைய உறவாடலானது ஒரு வகையில் அதிகமான முரண்பாடுகளையும் அதிகமான பகைமைகளையும் ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக சுதந்திரத்திலிருந்து இலங்கையை ஆட்சி செய்த அனைத்து ஆட்சியாளர்களும் இந்தியாவுக்கு எதிரான வெளியுறவு கொள்கைகளைக் கொண்டிருந்தார்கள். அதற்கு அடிப்படையான காரணம் இந்தியர்களுடைய அல்லது இந்திய ஆட்சியாளர்களுடைய ஆதிக்கம் இலங்கைத்

தீவில் அதிகமாக நெருக்கடியை ஏற்படுத்துமோ என்ற பயம். அந்த பயத்தின் அடிப்படையிலே இலங்கைத் தீவின் ஆட்சியாளர்கள் தங்களது கொள்கை வகுப்பை முதன்மைப்படுத்தி இருந்தார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலப் பகுதியில் இருந்து இந்தியாவோடு நெருக்கமான உறவு வைத்தவர்கள் ஈழத்தமிழர்களாகவே இருந்தார்கள். அதிலும் குறிப்பாக தந்தை செல்வநாயகம் அவர்களுடைய காலப்பகுதியைச் சொல்லலாம். 1962ஆம் ஆண்டு இந்தியா சீனாவுக்கு இடையில் போர் நிகழும் போது இந்தியாவுக்கு ஆதரவாக படை திரட்டப்பட்டது. அவர்களுக்குரிய பொருளாதார உதவிகள் ஏனைய உதவிகளை வழங்குவதற்கான செய்முறை பற்றிய உரையாடல்களை வடக்கு கிழக்கு முதன்மைப்படுத்தி இருந்தது.

குறிப்பாக இலங்கையினுடைய வடக்கு கிழக்கு இளைஞர்களை அணிதிரட்டி போரில் ஈடுபடுத்துவதற்கு கூட தமிழரசு கட்சியின் தலைமையில் இருந்த தந்தை செல்வா முயற்சிகளை மேற்கொண்டதாக வரலாற்று தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. அந்த அளவுக்கு நெருக்கமான ஒரு பிணைப்பை ஈழத்தமிழர்கள் இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஈழத்தமிழர்களுக்கு தமிழகத்துடன் இருந்த உறவு ஒரு தனித்துவமானதாக இருந்தது. அது ஒரு பரிச்சயத்தை இந்தியாவுக்கும் ஈழத்தமிழருக்கும் இடையே ஏற்படுத்தி இருந்தது. இலங்கையினுடைய வடக்கு கிழக்கு பகுதியில் இருந்து பின்னர் எழுந்த ஆயுதப் போராட்டம் இந்தியாவுடன் நெருக்கமான ஒரு தன்மையை ஏற்படுத்தியது. பின்னர் அதன் விளைவுகள் பாரிய அளவிலான முரண்பாட்டை இந்த உறவில் ஏற்படுத்தி இருந்தது.

தற்பொழுது இருக்கின்ற இந்த களத்தை அவதானிக்கின்ற பொழுது பொருளாதார ரீதியான இந்தியர்களுடைய ஒத்துழைப்புகள் முதன்மையாக இருந்த போதிலும் சீனர்களின் ஒத்துழைப்பும் அதே சம வலுவோடு வாய்ப்புகளை இலங்கைக்கு வழங்கப்படுவதைக் காணலாம். இந்த அடிப்படைகளுக்குள் இருந்துதான் இலங்கை சார்ந்து சீனா எடுக்கும் நடவடிக்கைகளை அவதானிக்க வேண்டும். குறிப்பாக வடக்கு கிழக்கை நோக்கி சீனர்களின் ஒரு வகையான அபிவிருத்தி சார்ந்த நகர்வுகளை நோக்க வேண்டும். எவ்வாறு உலகத்தை அவர்கள் படிப்படியாக கைப்பற்றினார்களோ அதே போன்று இலங்கையையும் தங்களுடன் இணைத்துக் கொள்வதில் அவர்கள் காட்டும் அக்கறையை பார்க்க வேண்டும். இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களில் முதலிடுவதற்கு அல்லது இலங்கையை கடன் பொறியில் இணைத்துக் கொள்வதற்கு தமக்கு கிடைத்த காத்திரமான வாய்ப்புகளை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு வெற்றி பெற்றிருக்கின்றார்கள். இனி வரும் காலப் பகுதிகள் முழுவதும் உலகளாவிய ரீதியான அரசியல் போக்குகளில், குறிப்பாக ரஷ்யா - உக்ரைன் யுத்தத்துக்கு பின்னர், சீனாவின் தாக்கம் முக்கியமானதாக இருக்கும். ரஷ்யாவினுடைய இருப்பில் நெருக்கடியான நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. யுத்தம் காரணமாக ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கா போன்றவற்றிற்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது சீனாவுக்கு ஒரு வாய்ப்பான களத்தை தந்துள்ளது.

உலகளாவிய ரீதியில் சீனாவினுடைய செல்வாக்கு அல்லது வலுச் சமநிலை மேலும் பலமடைவதற்கான ஒரு வாய்ப்பை இந்த யுத்தம் உருவாக்கி உள்ளது. ஆகவே இந்த பின்னணியை வைத்து அவதானிக்கின்ற

> ***"இலங்கையில் ஆட்சியாளர்கள் மாறினாலும், ஆட்சி முறைகள் மாறினாலும், ஏன், இலங்கை அரசின் அடிப்படைக் கொள்கையே மாறினாலும், இலங்கையில் சீனாவின், இருப்பு மாறப்போவதில்லை"***

பொழுது இலங்கைத் தீவில் சீனாவின் உடைய இருப்பு நிரந்தரமாகி உள்ளது. இலங்கையில் ஆட்சியாளர்கள் மாறினாலும், ஆட்சி முறைகள் மாறினாலும், ஏன் இலங்கை அரசின் அடிப்படைக் கொள்கையே மாறினாலும் இலங்கையில் சீனாவின் இருப்பு மாறப்போவதில்லை.

இலங்கையின் அரசியல் இருப்பு சீனாவுடன் பொருளாதார ரீதியில் பின்னிப்பிணைந்த ஒன்றாக இருப்பதற்கான வாய்ப்புத்தான் அதிகம் இருக்கின்றது. கடந்த காலங்களில் எவ்வாறு பிரித்தானியா மற்றும் அமெரிக்காவுடன் இலங்கை வைத்திருந்த வெளியுறவுக் கொள்கைகள் ஒரு காத்திரமான பொருளாதார மற்றும் இராணுவ ரீதியான முக்கியத்துவத்தை பெற்றிருந்தனவோ அதே போன்ற முக்கியத்துவத்தை சீனாவும் கொண்டிருக்கின்ற நிலையை இலங்கை சீன உறவு ஏற்படுத்தி இருக்கின்றது. குறிப்பாக இந்தியா என்கின்ற ஒரு சக்தியை இலங்கை ஆட்சியாளர்கள் கையாள வேண்டுமாக இருந்தால் அதற்கு பின்னால் சீனா இலங்கை இடையிலான உறவு என்பது அவர்களுக்கு அவசியமான பலத்தை தந்து இருக்கிறது. நிச்சயம் இலங்கையில் எதிர்வரும் காலப்பகுதியில் அரசினுடைய இருப்பு முழுக்க முழுக்க சீனர்களுடைய நலன்களோடும் சீனர்களுடைய வாய்ப்புக்களோடும் சேர்ந்து பயணிக்கின்ற ஒரு சூழலை ஏற்படுத்தி உள்ளது.

ஏனெனில், வரலாற்று ரீதியாக அண்மை காலங்களில் சீனா உலகத்திலுள்ள ஏனைய நாடுகளை எவ்வாறு தன்னுடைய உத்திகள் ஊடாக, செயற்பாடுகள் ஊடாக, மூலோபாயத்தின் ஊடாக கட்டுப்படுத்தியதோ அதே போன்று செயல்முறையை இலங்கையில் செய்யக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. இதற்கூடாக இலங்கையின் வடக்கு கிழக்கும் கூட ஒரு பாரிய நெருக்கடிக்கு உட்படுகின்ற சூழலும் காணப்படுகிறது. இந்த நடவடிக்கை ஊடாக இந்தியா இந்து சமுத்திரத்தைச் சார்ந்து அல்லது இந்து-பசுபிக் பிரதேசத்தைச் சார்ந்து இருக்கின்ற இருப்பையும் அது தொடர்பாக செயற்படக்கூடிய வாய்ப்புக்களையும் சீனா நெருக்கடிக்கு உள்ளாக்கும். ஏனென்றால், இலங்கைத் தீவு ஒரு இந்து சமுத்திர மையப் பகுதியில் அமைந்திருப்பதனால் இந்தியா உட்பட உலகளாவிய வல்லரசுகளுக்கு அது தேவையானது என்ற அடிப்படையில் சீனாவின் நடவடிக்கைகள் நோக்கப்பட வேண்டியதும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியதும் அவசியம்.

---

(6 ஆம் பக்க தொடர்ச்சி)

அந்த செயற்திட்டம் கொண்டிருக்க வேண்டும். இந்தியா அழைத்தவுடன் எல்லாம் அவர்கள் கேட்பதற்கெல்லாம் தலையாட்டுவதை ஈழத்தமிழரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் நிறுத்த வேண்டும். இந்த பேரம் பேசல் 'உங்களுக்கும் நன்மை, எங்களுக்கும் நன்மை' என்ற அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். இது கத்தியில் நடப்பதைப் போன்றது. இந்து சமுத்திர பிரதேச மற்றும் சர்வதேசம் பற்றிய அறிவுசார் நிலையில் நின்று அணுகப்பட வேண்டியது.

ஈழத்தமிழரின் நீண்ட கால அரசியல் எதிர்காலமும் அவர்களது இருப்பும் இதில் தொங்கிக் கொண்டு இருக்கின்றன என்பதை தமிழ் தலைமைகள் உணர வேண்டும். அதேவேளை இந்தியாவுக்கும் எம் மக்கள் தேவைப்படுகிறார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி ஈழத்தமிழர்கள் சார்பில் தானே கையெழுத்திட்ட இந்தியா இறுதிப்போரில் சிங்கள பேரினவாத அரசு தமிழர்களை போரில் தோற்கடிக்க பல்வேறு உதவிகளையும் வழங்கியது. பின் 2009க்கு பிறகு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அன்று தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட 13 ஆம் திருத்தத்துக்குள்ளே தான் ஈழத்தமிழர்களின் அரசியலை முடித்துவிட பார்க்கிறது. ஆனால் ஈழத்தமிழர்களோ சமஷ்டி தீர்வு தான் தங்களுக்கு வேண்டும் என்பதனை பின்பு நடந்த பல்வேறு தேர்தல்களில் முறையாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். ஆகவே ஈழத்தமிழர்களின் விருப்புகளை புரிந்து கொண்டு அவர்களுக்கு கௌரவமான தீர்வை பெற்றுக் கொடுக்க பிராந்திய வல்லரசான இந்தியா உதவ வேண்டும்.

(09 ஆம் பக்க தொடர்ச்சி)

ஒரு கால இழுத்தடிப்பாகவும் கடன் வழங்கிய வெளிநாட்டவரை ஏமாற்றும் நடவடிக்கையாகவும் மட்டுமே பார்க்க முடியும் என்று அவர் சொல்வதில் உண்மை இருப்பதை மறுப்பதற்கு இல்லை.

புதிய அரசியலமைப்பை கொண்டு வருவது, பேச்சுக்கு போவது என்பதெல்லாம் கால இழுத்தடிப்பே ஒழிய வேறொன்றும் இல்லை என்பது தான் தமிழ்மக்களின் கடந்த கால அனுபவம். இந்திய அரசின் அழுத்தத்தின் ஊடாக ஏற்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தில் கூறப்பட்ட தமிழ் மக்களுடன் அதிகாரப்பகிர்வு மற்றும் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் கூட பேச தயாரில்லாத சிங்கள அரசு புதிய அரசியலமைப்பை இதயசுத்தியுடன் கொண்டு வந்து தமிழ்மக்கள் விரும்பும் தீர்வை காணும் என்பதனை எவ்வாறு நம்புவது?

சிங்கள அதிகார வர்க்கத்தின் மனநிலையிலும், சிங்கள மக்களின் மனநிலையிலும் மாற்றம் ஏற்படாதவரை இலங்கைத்தீவின் பொருளாதாரம் மேலும் அதல பாதாளத்தை நோக்கியே செல்லும். பொருளாதார நெருக்கடி மேலும் மேலும் அரசியல் ஸ்திரமின்மைக்கும் சமூகச் சீரழிவுக்குமே இட்டுச் செல்லும். அதன் விளைவாக இலங்கையர்கள் அனைவருமே நாட்டின் மீதான தமது இறைமையை இழந்து அந்நிய நாட்டினரின் கட்டளைகளுக்கு இழுபட்டுச் செல்பவர்களாக வாழும் காலம் வருவதை தவிர்க்க முடியாது.

---

(24 ஆம் பக்க தொடர்ச்சி)

பதிலை தெளிவாக பறையறைந்து சொல்லியிருக்கிறார்கள். இது சர்வதேச சமூகத்துக்கு தெரியாத ஒன்று அல்ல. கடந்த 70 வருடங்களுக்கும் மேலாக எமது மக்கள் இதையே பல்வேறு வழிகளிலும் உலகுக்கு சொல்லி வந்திருக்கிறார்கள்.

ஆனால், 2009 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்களது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று சர்வதேச சமூகம் நினைக்கத் தலைப்பட்டிருக்குமாக இருந்தால் அதை விட உண்மைக்குப் புறம்பானது வேறு ஒன்றும் இல்லை என்பதை தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்திற்கு சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ் அரசியற்கட்சித் தலைவர்களுக்கும் இந்த மாவீரர் நாள் எழுச்சி ஒரு தெளிவான செய்தியை சொல்லி இருக்கிறது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் தமது சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை தமிழ்மக்கள் கைவிடவில்லை என்ற செய்தியே அது. மீண்டும் பேச்சுவார்த்தை என்ற ஒரு தந்திரத்தை சிங்கள பேரினவாத அரசு கையில் எடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் ஒற்றை ஆட்சியை ஏற்கின்ற எந்தவொரு பேச்சுவார்த்தையும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்படும் என்பதை தமிழ் அரசியற் கட்சித் தலைவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். மேலும் இந்தியாவின் அழுத்தங்கள் காரணமாக 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதனூடாகவோ அல்லது 13 என்ற ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவதனூடாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்த்து விடலாம் என்று தமிழ் அரசியற் கட்சித் தலைவர்களும் சிங்கள அரசியற்கட்சித் தலைவர்களும் நினைத்தால் அந்த நடவடிக்கை ஒரு வெறும் விரயம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மாவீரர் குடும்பங்கள் தமது குடும்பத்தில் இருந்து மாவீரர் ஆகிப்போனவருக்கு அஞ்சலி செலுத்தவே மாவீரர் நாளில் ஒன்று கூடினார்கள் என்று அர்த்தம் கற்பிக்க சில சக்திகள் விளையக்கூடும்.

ஆனால் மாவீரர் குடும்பங்களையும் தாண்டி ஒரு இனமாக தமிழ் மக்கள் ஒன்று கூடி மாவீரர்களுக்கு விளக்கு ஏற்றி இருக்கிறார்கள் என்பதே உண்மை. எந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த தமிழ் மக்கள் பெருமளவில் ஒன்று கூடினார்களோ அந்த மாவீரர்களின் கோட்பாட்டிலேயே தமிழ் மக்கள் இன்னும் நிற்கிறார்கள் என்பதைத் தவிர வேறு எந்த வகையிலும் இந்த மாவீரர் நாள் எழுச்சியை அர்த்தப்படுத்தி விடமுடியாது.

# மாவீரர் நாள் – 2022 பேரெழுச்சி உலகுக்கு சொல்லும் செய்தி

- துருவன் -



தமிழர் தாயகத்தில் இந்த ஆண்டு கார்த்திகை 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் பேரெழுச்சியுடன் இடம்பெற்று இருக்கின்றன. இம்முறை மாவீரர் நினைவேந்தலில் பல ஆயிரக்கணக்கான மக்கள் தன்னெழுச்சியுடன் பங்கேற்று தங்கள் உறவுகளுக்கு தீபமேற்றி, மலரஞ்சலி செலுத்தி இருக்கிறார்கள்.

இத்தீவில் தமிழர்களுக்கு என்று தனியரசு அமைந்தாலே சிங்கள தேசத்தின் ஒடுக்கு முறைகளில் இருந்து விடுபட்டு வாழலாம் என்ற கோட்பாட்டை தலைமேற் சுமந்து போராடி உயிர்நீத்த ஆயிரமாயிரம் வீரமறவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக பல்லாயிரக்கணக்கான மக்கள் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசமெங்கும் ஒன்று கூடியிருக்கிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அலம்பில் துயிலுமில்ல வாசலில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு வளைவை பொலிஸார் அகற்றிய போதும் மீண்டும் ஏற்பாட்டாளர்களால் வளைவு அமைக்கப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. அதே போல் வவுனியா நகரசபை மண்டபத்தில் மாவீரர் நினைவாக வைக்கப்பட்டிருந்த நினைவுருவப் படத்தை பொலிஸார் வெட்டி எடுத்துச் சென்றனர். பின் பொலிஸார் வெட்டி எடுத்து சென்ற திருவுருவப் படத்துக்கு கறுப்பு மை தீட்டப்பட்டு மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம் பெற்றன. இதேபோல் யாழ்ப்பாணம் - வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அருகே இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வின் போது அங்கு வந்திருந்த மக்களை இராணுவத்தினர் ஒளிப்படப்பிடிப்பு கருவிகளினூடாக படம்பிடித்து கண்காணித்ததுடன் கைபேசிகள் ஊடாக ஒளிப்படம் எடுத்தும் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர். அவ்வீதியின் இருமருங்கிலும் 21ஆம் திகதியில் இருந்து பொலிஸ், இராணுவ சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு வாகனங்களில் செல்வோர் விசாரிக்கப்பட்டனர். இம்முறையும் பல்வேறு அடக்குமுறைகளையும் தாண்டியே தமிழர் தாயகத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் உணர்வெழுச்சியோடு இடம்பெற்று இருக்கின்றன.

தங்களது உயிர்களுக்கும் மேலாக தேசத்தின் விடுதலையை எம் மக்களின் சுதந்திர வாழ்வை ஆழமாக நேசித்து அந்த உயரிய இலட்சியத்துக்காக போராடி தம்முயிர்களை எம்மண்ணுக்கு விதையாக்கிய மாவீரர்களின் நினைவு நாளில் பல்லாயிரக்கணக்கில் ஒரு தேசமாக, ஒரே உணர்வுடன் ஒன்று கூடிய தமிழ் மக்கள் தமிழ் அரசியல் தலைமைகளுக்கும், சிங்கள பேரினவாத அரசுக்கும் உலக நாடுகளுக்கும் திட்டவட்டமான செய்தியை சொல்லி உள்ளார்கள்.

தமிழ் மக்களின் அபிலாசைகளான சுய நிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம் மற்றும் தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதே அதுவாகும். குறிப்பாக, சர்வதேச நாடுகள் தமிழ் அரசியற் தலைமைகளிடமும் வெகுசன அமைப்புக்களிடமும் "ஈழத் தமிழ் மக்களுக்கு எத்தகைய தீர்வு வேண்டும்" என்று கேட்கும் கேள்விக்கு பெரும்பான்மையான ஈழத்தமிழர் வேண்டுவது இதுதான் என்ற

(23 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 20.12.2022 அன்று வெளியிடப்பட்டது.